# பாட்டாளி சிந்தனை

Volume 34 No 1

September 2023

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

SUCI (Communist)

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 5


# மாசேதுங் நீடூழி வாழ்க!

நமது நாட்டில் சிலர், நமது அமைப்பான மக்கள் ஜனநாயகத்தில் மிகக் குறைந்த சுதந்திரமும், மேற்கத்திய பாராளுமன்ற ஜனநாயகத்தில் அதிக சுதந்திரமும் இருப்பதாக நினைக்கின்றனர். மேற்கத்திய நாடுகளில் இருப்பதைப் போல், ஆட்சியில் ஒரு கட்சியும் மற்றொரு கட்சி எதிர் கட்சியாகவும் இருக்கக்கூடிய இரு கட்சி பாராளுமன்ற முறையை அவர்கள் கோருகின்றனர். ஆனால் இரு கட்சி பாராளுமன்ற அமைப்பு முறை என அழைக்கப்படும் இந்த அமைப்பு, முதலாளித்துவ சர்வாதிகாரத்தைப் பேணும் ஓர் கருவியே அன்றி வேறல்ல; இது உழைக்கும் மக்களுக்கு எக்காலத்திலும் சுதந்திரத்தை உத்தரவாதப்படுத்தாது. உண்மையில், சுதந்திரமும் ஜனநாயகமும் வெறும் கருத்து வடிவம் அல்ல, அது பருண்மையான யதார்த்தமாகும். வர்க்கப் போராட்டம் நிலவும் ஒரு நாட்டில், உழைக்கும் மக்களைச் சுரண்ட, சுரண்டுவோருக்குச் சுதந்திரம் இருந்தால், சுரண்டப்படும் மக்களுக்குச் சுதந்திரம் இல்லை.

முதலாளிகளுக்கு ஜனநாயகம் இருந்தால் பாட்டாளிகளுக்கும் உழைக்கும் மக்களுக்கும் ஜனநாயகம் இல்லை. சில முதலாளித்துவ நாடுகளில், கம்யூனிஸ்ட் கட்சி சட்டபூர்வமாக இருப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றது, ஆனால், முதலாளிகளின் அடிப்படை நலனுக்கு அபாயம் ஏற்படாத வரையில் தான் அது அனுமதிக்கப்படுகிறது. அதற்கு மீறி கம்யூனிஸ்ட் கட்சியை அவர்கள் பொறுத்துக் கொள்வதில்லை. சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் சொல் வடிவில் மட்டும் கோருகிறவர்கள், ஜனநாயகத்தை இறுதி கட்டமாகக் கருதுகிறார்களே அன்றி, உரிமைகளை எட்டும் வழிமுறையாக அல்ல. ஜனநாயகம் மேற்கட்டுமானத்தின், அரசியலின் ஒரு பகுதிதான் என மார்க்சிசம் நமக்கு கற்றுக் கொடுக்கிறது. இறுதி ஆய்வின்படி, ஜனநாயகம், (முதலாளித்துவப்) பொருளாதார அடித்தளத்திற்குத்தான் சேவை செய்கின்றது. இது சுதந்திரம் என்பதற்கும் பொருந்தும். ஜனநாயகமும் சுதந்திரமும் ஒப்பீட்டளவிலானவையே அன்றி எக்காலத்திற்குமான அறுதியானது (Absolute) அல்ல.

**(மக்கள் மத்தியிலுள்ள முரண்பாடுகளைச் சரியாக கையாள்வது குறித்து)**



**26 டிசம்பர் 1893 – 9 செப்டம்பர் 1976**

# சுரண்டப்படும் ஒடுக்கப்படும் கோடிக்கணக்கான மக்களின் கண்ணீரே தோழர் சிப்தாஸ் கோஷ்ஐ உண்மையைத் தேடும் ஆயுதமாக மார்க்சியத்தைத் தழுவத் தூண்டியது



**தோழர் பிரவாஸ் கோஷ், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர்**

***(ஆகஸ்ட் 5, 2023 பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் தோழர் சிப்தாஸ் கோஷ் பிறந்த நூற்றாண்டு நிறைவு விழாவில் தோழர் பிரவாஸ் கோஷ் சிறப்புரையின் சுருக்கம்)***


இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் பேரணி கூட்டத்திற்கு வந்திருக்கும் விவசாயிகளை, தொழிலாளர்களை, மாணவர்களை, இளைஞர்களை, மகளிரை, நடுத்தர வர்க்கத்து மக்களை, வெளிநாட்டுப் பிரதிநிதிகளை, நமது கட்சியின் மத்தியக் கமிட்டி சார்பில் அன்புடன் வரவேற்கிறேன். இந்நிகழ்ச்சிக்காக நமது தோழர்கள் அணுகியபோது நிதி மற்றும் அனைத்து ஆதரவையும் நல்கி உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சாமானிய மக்கள் தாராளமாக உதவியிருக்காவிட்டால், இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியை இன்று எம்மால் நடத்த முடியாது. அந்த வசதி எமக்குக் கிடையாது. எப்போதும் நாங்கள் பொதுமக்கள் அளிக்கும் நன்கொடையை நம்பி இருப்பவர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இங்கு கூடியிருப்போரில் பெரும்பகுதியினர் வங்க மொழியினர் என்பதால் அந்த மொழியில் நான் உரையாடுகிறேன். நாட்டின் பிற மாநிலங்களிலிருந்து வந்திருக்கும் மற்ற மொழி பேசுபவர்கள் பொறுத்துக் கொள்ளுமாய் தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

### உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கப் பாடுபட்ட அந்த நாட்கள்

முதற்கண், மாபெரும் பாட்டாளி வர்க்கத் தலைவர் தோழர் சிப்தாஸ் கோஷ் உரையிலிருந்து சில வரிகளை வாசித்துக் காட்ட விரும்புகிறேன். “இந்தக் கட்சி துவங்கியபோது எங்களிடம் எதுவுமே இல்லை; பணமில்லை, ஆட்கள் இல்லை, தங்க இடமில்லை, நம்மை அறிந்தவர்கள் யாருமில்லை. ...அப்பொழுது நான் ஒரு இளம் வயது மனிதன்.... இந்தியாவில் உண்மையான புரட்சிகரக் கட்சி இல்லை, அத்தகைய ஒரு கட்சியை உருவாக்க வேண்டும் என்று கூறிய ஒரு இளைஞன் நான். எனது வாதத்தைக் கேட்ட பலரும் ஆம், அதை உருவாக்க வேண்டும் என்றனர். இந்த தர்க்க வாதங்கள் சரி, ஆனால் இது ஒரு பைத்தியக் காரத்தனமான முயற்சி என்றனர். இது சாத்திய மில்லை, முடியாது என்றனர். நான் அவர்களுடன் மேற்கொண்டு அதிகமாக விவாதிக்கவில்லை. பதிலுக்கு நான் அவர்களைக் கேட்டது, நான் என்ன செய்ய வேண்டும், ... அடிமையாக இருக்கவா, ஏஜெண்டாக செயல்படவா, எனது அறிவை விற்றுவிடவா? அதை நான் செய்ய முடியாது. இப்போராட்டத்தில் சாவதாக இருந்தால், தலை நிமிர்ந்து சாவேன். நான் சுட்டு வீழ்த்தப்படலாம் ஆனால் என்னை வாங்க முடியாது. அந்நாட்களில் தங்கும் அறையை, மேற்கூரையை எங்களால் ஏற்பாடு செய்ய முடியவில்லை. பல்வேறு தடைகளுக்கும் சாதகமற்ற சூழலுக்கும் இடையே ஒரு புதிய கட்சியை கட்டும் தீவிரப் போராட்டத்தில் ஒவ்வொரு நாளும் உணவின்றி கடுமையாக பாடுபட்டோம். ஆனால் இதற்காக நாங்கள் குறை பட்டுக்கொண்டதில்லை. அன்று சிபிஐ கம்யூனிஸ்ட் கட்சி பிளவுபடாததாக இருந்தது. காளானைப் போல முளைத்தவர்கள் நாங்கள் எனக் கூறி சிபிஐ எங்களை எள்ளி நகையாடியது. எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) ஒரு கட்சி என்றால், வௌவாலும்

தொடர்ச்சி 2ம் பக்கம்



**பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் தோழர் சிப்தாஸ் கோஷ் பிறந்த நூற்றாண்டு நிறைவு விழாவில் கொல்கத்தாவில் கலந்துகொண்டோரின் ஒரு பகுதி**

## தோழர் பிரவாஸ் கோஷ் உரை . . .

# உண்மை வெல்லும் என்ற தோழர் சிப்தாஸ் கோஷ் நம்பிக்கையை ஆகஸ்ட் 5, கொல்கத்தா கூட்டம் உறுதிப்படுத்துகிறது

*1ம் பக்கத் தொடர்ச்சி*

ஒரு பறவைதான், இவர்களுடனெல்லாம் நாம் சேர்ந்து அமர்வதா என்றனர். இந்தக் கேலிப் பேச்சுக்களையெல்லாம் அமைதியாக நான் பொறுத்துக் கொண்டேன். அவர்களின் கிண்டல் களைச் செவிமடுக்கவில்லை. எமது கட்சியைக் கட்டும் எஃகு போன்ற உறுதியுடன் நான் முன்னேறிச் சென்றேன். பல்லாண்டுகளாக நாங்கள் கோரைப் புல் பாய்களில்தான் படுத்தோம். பல கோடைகளும் குளிர்காலங்களும் இவ்வாறே சென்றன. ... உணவின்றி எத்துணை நாட்கள் வாழ்ந்தோம்; ஆனால் அதைப்பற்றி பேச வெட்கப்பட்டோம். எங்களுக்குத் தேவையான பணத்தை, பொருட்களை ஏற்பாடு செய்ய முடியவில்லை என்பதை எங்களது தனிப்பட்ட தோல்விகளாக எடுத்துக் கொண்டோம். அதைச் சொல்லிக்காட்டி பெருமைப்பட என்ன இருக்கிறது? ...அதை தியாகத்தின் உச்சம் எனக் கருத முடியுமா? புரட்சியாளர்களின் சொந்தத் தேவைகளும் அவர்கள் சந்திக்கும் துயரங்களும் ஒடுக்கு முறைகளும் சாமானிய மக்களுக்கு கஷ்டங்களாகத் தோன்றும். ஆனால் வெளிப் பார்வைக்கு கஷ்டமாக வேதனையாகத் தோன்றும் வாழ்வின் இடையே புரட்சியாளர்கள் அனுபவிக்கும் மகிழ்ச்சியும் நிம்மதியும், சகல சௌகரியங்களுடன் பாதுகாப்பாக வாழ்வோருக்குப் புரியாது. புரட்சி யாளனுக்கு புரட்சியைவிட அரிய பொக்கிஷம் எதுவும் கிடையாது. புரட்சியாளராக வாழ்வதை விட அதிக பெருமைவாய்ந்த வாழ்க்கை அவருக்குக் கிடையாது. ... பட்டினி கிடந்து சாக வேண்டி யிருக்கலாம் என்பதை நான் அறிவேன். பட்டினியால் சாகும்போது எட்டிப் பார்த்து கவனிக்ககூட யாரும் வராமல் போகலாம். ஆயினும் முயற்சி எதுவும் வீணாகாது. உண்மையான புரட்சி தத்துவம் இன்றி, உண்மையான புரட்சிகரக் கட்சி இன்றி எதுவும் நடக்காது, இது வீணாகிப் போகாது, வீணாக முடியாது என்பதை ஐம்பது அல்லது நூறு பேருக்காவது பட்டினியால் சப்தமின்றி சாவதன் மூலம் புரட்சியாளர் உணர்த்திவிடுகிறார்."

ஆக, இந்தப் போராட்டம் தோற்காது என்பதில் தோழர் சிப்தாஸ் கோஷ் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். அப்படித் தோற்கவில்லை என்பதற்கு இங்கு கூடியிருக்கும் மக்கள் திரளே சாட்சி! இங்கு கூடிருக்கும் மக்கள் திரள் நாடெங்கிலும் பரவியிருக்கும் எங்கள் கட்சியின் சிறு பகுதியே. 26 மாநிலங்களிலிருந்து தொழிலாளர்களும் ஆதரவாளர்களும் இங்கு வந்துள்ளனர். எல்லோரையும் இங்கு அழைத்துவர போதிய வசதியோ நிதி ஆதாரமோ எம்மிடமில்லை.

தோழர் சிப்தாஸ் கோஷ் எங்கள் நெஞ்சில் வாழ்ந்துகொண்டிருக்கிறார். அவர் காட்டிய வழியில் கட்சி துணிச்சலுடன் போராடி முன்னேறிக் கொண்டிருக்கிறது. எம்எல்ஏக்கள், எம்பிக்கள் எவருமின்றி, அரசாங்கப் பதவிகளின் உதவியின்றி, ஊடகப் பிரச்சாரப் பலமின்றி, மார்க்சிசம்–லெனினிசம்–சிப்தாஸ் கோஷ் சிந்தனை என்ற உன்னதச் சித்தாந்தத்தின் பலத்தால் இக்கட்சி நாடெங்கிலும் பரவிக் கொண்டிருக்கிறது. மார்க்சிசம்–லெனினிசத்தை தோழர் கோஷ் மேலும் விரித்துரைத்து வளர்த்துச் செழுமைப்படுத்தினார்.

தோழர் சிப்தாஸ் கோஷ் கீழ் நடுத்தர வர்க்க குடும்பப் பெற்றோருக்கு மூத்த மகன். சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் புரட்சியின் அறை கூவலுக்குச் செவிமடுத்து அவர் சென்றபோது, குடும்பத்தை யார் கவனித்துக் கொள்வார்கள் என பெற்றோர் கேட்டனர். அதற்கு அவர், 'இலட்சக் கணக்கான ஏழை பெற்றோர்கள் வீதிகளில் கண்ணீருடன் கதறுகின்றனர். நான் அவர்களின் பிள்ளை. அவர்களது கண்ணீரைத் துடைக்க வேண்டியது எனது கடமை' என்றார். பின்னாளில் பின்வரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வாக்கியத்தை உதிர்த்தார்: 'புரட்சிகர அரசியல் இதயத்தின் உன்னத உணர்வைக் கோருகிறது'. இவ்வாறாக, வரலாற்றின் எல்லா சகாப்தத்தையும் சேர்ந்த மாகான்களான, புத்தர், ஏசு, முகம்மது ஆகியோர் முதல் மறுமலர்ச்சி காலத் தலைவர்கள், சுதந்திரப் போராட்டத் தலைவர்கள், பாட்டாளி வர்க்க புரட்சியின் தலைவர்கள் வரை அவர்களால் பேசப்படாத கருத்திற்கு சொல் வடிவத்தை அவர் வழங்கினார். நம்மையும் அவ்வாறு நோக்குமாறு அவர் கற்றுக் கொடுத்தார்.

### மார்க்சிய அறிவியலை அவர் ஏற்றுக்கொண்டது ஏன்?

அந்நாட்களில் தோழர் சிப்தாஸ் கோஷ் ஆங்கிலேயர் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என விரும்பியது மட்டுமின்றி கோடிக்கணக்கான ஏழை எளிய மக்களை சுரண்டலில் இருந்து விடுவிக்க வேண்டும் என்றும் விரும்பினார். எனவே பூர்த்தி செய்ய சரியான வழியை அவர் தேடினார். மதத்தை பின்பற்றுவதன் மூலம் அந்த விடுதலையை கொண்டுவர முடியுமா? அது சாத்தியமல்ல என்பதை அவர் உணர்ந்தார். இந்த உலகம் எல்லாம் வல்ல இறைவனால் அல்லாவால் இயேசுவால் கடவுளால் ஆளப்படு கின்றது என்பதும் ஏழை பணக்காரன் அவரது படைப்பே என்பதும் மதவாத சிந்தனையின் அடிப்படை கருத்தாகும். நல்லதும் கெட்டதும் இவ்வுலகை படைத்த அவன் செயலே. அவனது விருப்பத்தின்படி தான் இவ்வுலகில் அனைத்தும் நடக்கின்றன. ஏழையாய் இருப்பது மனிதனின் முற்பிறப்பின் வினைப் பயன். வேலையின்மை பிரச்சினையை எப்படி தீர்ப்பது, ஆலைகளில் பணிநீக்கம் செய்வதை தடுப்பது எப்படி, விலைவாசி உயர்வை கட்டுப்படுத்துவது எப்படி, கல்வி போன்ற வற்றை எளிதாகப் பெறுவது எப்படி, பெண்களின் கண்ணியத்தை காப்பது, எப்படி வாழ்வது ஆகிய கேள்விகளுக்கெல்லாம் இராமாயணம், மகாபாரதம், திருகுர்ஆன், பகவத் கீதை, பைபிள் வேதாந்தம் ஆகியவற்றில் பதில் கிடையாது.

இம்மாமனிதர்களின் அருள் வாக்குகளில் இக்கேள்விகளுக்கெல்லாம் விடை இருக்கின்றதா? ஆனால் இது குறித்து மனிதருக்கு மனிதர் மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன, இருக்கின்றன. வேதங்களிலோ மறை நூல்களிலோ உண்மை இல்லை என இந்திய மறுமலர்ச்சியின் மிகப்பெரிய முன்னோடி வித்யாசாகர் கூறுகின்றார். அதற்கு அறிவியலையும் பொருள்முதல்வாதத்தையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிறார் மற்றுமொரு மாமனிதர் சுவாமி விவேகானந்தர் வேதாந்தத்தை புகழ்ந்து பாராட்டுகிறார். ஆனால் அவர் வித்யாசாகரையும் உயர்த்திப்பிடிக்கிறார். நாம் யாரை ஏற்றுக்கொள்வது? விவேகானந்தரையா, வித்யாசாகரையா?

அறிவியல் தான் அனைத்திற்கும் சரியான விடையை கூறமுடியும் என தோழர் சிப்தாஸ் கோஷ் இறுதியாக உணர்ந்தார். அறிவியல் ஒன்று தான் பரிசோதனைகளின் மூலம் நிரூபிக்கப்பட்டி ருக்கின்றது. நீர் என்றால் என்ன என்பதற்கு அறிவியல் உலகெங்கும் ஒரே விடைதான். மின்சாரம் என்றால் என்ன என்பதற்கும் ஒரே விடைதான். அவையெல்லாம் சோதனை செய்யப் பட்டு சரி பார்க்கப் பட்டிருக்கின்றன. பின்னாள் உருவான மார்க்சிசமும் அறிவியலை அடிப்படை யாகக் கொண்டதாகும். மார்க்சிசம் அறிவியல் பூர்வ தத்துவமாகும். எனவே மார்க்சிசத்தால் மட்டும்தான் உண்மைகளை கண்டறிய முடியும்.

பொருள் உலகம் தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கின்றது என்பதை அறிவியல் நமக்குக் காட்டு கின்றது. உலகம் தொடர் இயக்கத்தில் இருக்கிறது. செயல் விரைவுடன் செயல்படுகிறது. இந்த மாற்றம் இந்த இயக்கம் இவை இயக்க விதிகளால் ஆளப்படு கின்றது. அறிவியலின் பல்வேறு பிரிவுகள் அவை படிக்கும் துறைகளுக்கேற்ப குறிப்பிட்ட விதிகளால் ஆளப்படுகின்றன. அறிவியல் போக்கை பின்பற்றி அந்தந்த துறைகளில் அவ்விதிகளை நாம் அறிந்து கொள்ள முடியும். அவ்விதிகளைக் கொண்டு பொருட்கள் மீது செயல்படவும் முடியும். பொருட்களைப் போலவே இவ்விதிகளை ஆக்கவோ அழிக்கவோ முடியாது. அறிவியலின் பல்வேறு துறைகளில் செயல்படும் வெவ்வேறு விதிகளை ஒருங்கிணைத்து ஆய்வு செய்ததன் மூலம் பொது விதிகளை கண்டறிய முடிந்தது. அப்பொதுவிதிகளை அடிப்படையாகக் கொண்டுதான் மார்க்சிசம் உருவானது. ஆகவே மார்க்சிச தத்துவத்தைக் கொண்டு விதிகளால் ஆளப்படும், எப்பொழுதும் மாறிக்கொண்டிருக்கும் இந்த உலகத்தை ஆய்வு செய்ய முடியும். அப்படி கண்டறிந்த உண்மைகள் தான் மக்களை சரியான பாதையில் வழிநடத்த முடியும்.

### நேதாஜியின் அறைகூவலை சிபிஐ கட்சி செவிமடுக்கவில்லை

மார்க்சிச தத்துவத்தைக் கொண்டு தோழர் சிப்தாஸ் கோஷ் நாட்டின் சுதந்திரப் போராட்டத்தை ஆய்வு செய்தார். ஏராளமான தியாகங்களைச் செய்து உயிரையும் விட்டு நடத்தப்பட்ட இந்திய சுதந்திரப் போராட்டத்தின் தலைமை, டாட்டா, பிர்லா மற்றும் பல முதலாளிகளின் ஆதரவு பெற்ற காந்தியின் தலைமையில் இருப்பதை அவர் கண்டார். சுதந்திரப் போராட்டத்தின் மற்றொரு போக்கு அனுசீலன் சமிதி, யுகாந்தர், ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிக், கெதர் கட்சி மற்றும் பல்வேறு புரட்சிகரக் குழுக்களை கொண்ட நடுத்தர வர்க்கத்து ஆயுதம் தாங்கிய புரட்சியாளர்களின் தலைமையில் இருந்ததையும் கண்டார். இந்திய பூர்ஷ்வாக்கள் இரண்டு பிரிவினராக இருக்கின்றனர் என 1925ல் மாபெரும் தலைவர் தோழர் ஸ்டாலின் கூறினார். காந்திய தலைமையிலான பெரிய பூர்ஷ்வாக்கள் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்து கொண்டிருந்தனர். தொழிலாளர் வர்க்க புரட்சியைக் கண்டு அவர்கள் அஞ்சினர். எனவே சுதந்திரப் போராட்டத்தில் இருந்த குட்டி முதலாளித்துவ புரட்சியாளர்களுடன் இணைந்து பெரிய பூர்ஷ்வாக்களை தனிமைப்படுத்துவது இந்தியாவில் அன்று இருந்த கம்யூனிஸ்டுகளின் கடமையாகும். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (சிபிஐ) இன் செயல்பாடு தோழர் ஸ்டாலின் கூறியதற்கு முற்றிலும் மாறாக மார்க்சிசத்திற்கு எதிராக இருந்ததை சிப்தாஸ் கோஷ் நோக்கினார். சுதந்திரப் போராட்டத்தின் ஒரு கட்டத்தில் பல்வேறு குட்டி முதலாளித்துவ புரட்சிகர சக்திகள், காந்திஜியின் சமரசத் தலைமைக்கு மாறாக நேதாஜியின் தலைமையை ஆதரிக்கத் துவங்கினர். காங்கிரஸ் கட்சியின் ஹரிபுரா மாநாட்டில் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட நேதாஜி கூறினார்: "சோவியத் யூனியன் நமது




விழா மேடையின் முகப்புத் தோற்றம்

தொடர்ச்சி 3ம் பக்கம்

## தோழர் பிரவாஸ் கோஷ் உரை . . .

# சிபிஐ ஒரு கம்யூனிஸ்ட் கட்சியாக உருவாகத் தவறியதால் ஒரு உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியை கட்டியெழுப்பும் வரலாற்றுக் கடமையை தோழர் சிப்தாஸ் கோஷ் தானே ஏற்றுக்கொண்டார்

2ம் பக்கத் தொடர்ச்சி



**ஆகஸ்ட் 5, கொல்கத்தா பிரிகேட் பேரேட் மைதானத்தில் கூடியிருந்தோர்**

நண்பன். அதன் பெயரைக் கேட்டாலே ஏகாதிபத்தியவாதிகள் நடுங்குகின்றனர். சுதேசி இயக்கத்தில் தொழிலாளர்களும் விவசாயிகளும் ஈடுபடுத்தப்பட வேண்டும், ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட வேண்டும்" என நேதாஜி கூறினார். இவர் உரையைக் கேட்ட பூர்ஷ்வாக்களும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளும் காந்தியவாதிகளும் அஞ்சி நடுங்கினர். அடுத்த முறை தலைவர் தேர்தலில் நேதாஜியை தோற்கடிக்க பட்டாபி சீதாராமையாவை காந்தியவாதிகள் நிறுத்தினர். அப்படியும் நேதாஜியே வெற்றி பெற்றார். ஆனால் தலைவராக அவர் வெற்றி பெற்ற போதும், காந்தியின் தலைமையில் பூர்ஷ்வாக்கள் புதிய சதி செய்தனர். காங்கிரசில் காந்தியின் ஒப்புதலுடன் தான் எல்லா முடிவுகளையும் எடுக்க வேண்டும் என காங்கிரஸ் மாநாட்டில் புதிய திட்டத்தை காந்தியவாதிகள் முன்வைத்தனர். காங்கிரஸ் பணிக்குழுவையும் காந்தியின் ஒப்புதலுடன் தான் உருவாக்க வேண்டும் என அவர்கள் முன்மொழிந்தனர். காந்தியவாதிகளின் இந்த முன்மொழிவுகளை சிபிஐ கட்சியும் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியும் ஆதரித்தன. நேதாஜி தோற்கடிக்கப்பட்டார். காங்கிரசின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட நேதாஜியை செயல்பட காந்தியவாதிகள் அனுமதிக்கவில்லை. இதன் விளைவாக 1939இல் கொல்கத்தாவில் வெலிங்டன் ஸ்கொயரில் நடைபெற்ற அமர்வில் நேதாஜி பதவி விலக நேர்ந்தது. பிறகு காந்தியவாதிகள் நேதாஜியை யதார்த்தத்தில் காங்கிரசிலிருந்து வெளியேற்றி விட்டனர். இன்று பலருக்கும் இந்த வரலாறு தெரியாது.

பிறகு 1940ல் ராம்கார் நகரில் நடைபெற்ற இணை அமர்வில் இடதுசாரி ஒற்றுமைக்கான அறைகூவலை அவர் விடுத்தார். அம்மாநாட்டில் கலந்துகொள்ள சிபிஐ கட்சியையும் அவர் அழைத்தார். இது உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியை மார்க்சிஸ்ட் கட்சியை உருவாவதற்கான சூழ்நிலையை தோற்றுவிக்கும் என நேதாஜி கூறினார். ஆனால் அதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (சிபிஐ) சேரவில்லை. சர்வத்துக்கும் ஆகச் சிறந்த மனிதநேய கருத்தான கம்யூனிசம், இந்தியாவில் காலூன்ற முடியவில்லையே என மிகவும் வேதனை அடைந்தார். சிபிஐ தனது நண்பர்களை எதிரி முகாமில் தள்ளி விட்டனர், பிறருடன் அரவணைத்து செல்வது எப்படி என அவர்கள் அறியவில்லை. ஆக, தலைமைக்கு மாற்றாக நேதாஜியை முன்னிறுத்தி தலைமையை உருவாக்கும் சூழ்நிலையின் சாதகத் தன்மையை சிபிஐ பயன்படுத்திக் கொள்ளவில்லை. இதன் மூலம் யதார்த்தத்தில் முதலாளித்துவ தலைமை, வலிமை அடைய அவர்கள் உதவினார்கள். மேலும், விவசாயிகளும் தொழிலாளிகளும் சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பெற வைக்க அவர்கள் முயலவில்லை. 1942 ஆகஸ்ட் மாதம் வெள்ளையனே வெளியேறு இயக்கம் இந்தியாவையே போராட வைத்தது. ஆங்கிலேயர்கள் அஞ்சினர். காந்தியவாதிகளும் நடுங்கினர். ஆனால் சிபிஐ 1942 வெள்ளையனே வெளியேறு போராட்டத்தை எதிர்த்தது. சோவியத் யூனியன் அக்கட்சியை அவ்வாறு செய்யச் சொன்னதாக பலரும் நினைத்தனர். ஆனால் 1952ல் தோழர் ஸ்டாலின் வியப்புடன் அவர்களை விமர்சித்தார்: 1942இல் நீங்கள் ஏன் பிரிட்டிஷாருடன் கை கோர்த்தீர்கள்? சிபிஐ கட்சியின் செயல்பாடு இவ்வாறாகத்தான் இருந்தது.

நேதாஜி, 'ஒரு திருடன் மற்றொரு திருடனை பிடிக்கட்டும்' என்ற சொல்லுக்கு இணங்க ஜப்பானுடன் ஒரு போர் தந்திரமாக இணைந்து இந்திய தேசிய இராணுவத்தை அமைத்தார். நேதாஜி போன்ற ஒரு தேசபக்தரை ஜப்பானின் ஏஜெண்ட் எனக் கூறலாமா? இந்தியாவில் ஜப்பான் ஏகாதிபத்திய ஆட்சியையா அவர் ஏற்படுத்த நினைத்தார்? பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஜப்பானியர்களை அவர் பயன்படுத்த விரும்பினார். அதேபோல், சோவியத் யூனியனுக்கு எதிராக இந்திய தேசிய இராணுவத்தை அவர் பயன்படுத்தவில்லை. ஆயினும் நேதாஜியை சிபிஐ கட்சி துரோகி என அழைத்தது. அவரை ஜப்பானின் ஏஜெண்ட் என்றது. இந்தியாவை இரு நாடுகளாக பிரிக்க வேண்டும் என்ற பிரிவினை கோரிக்கை எழுந்த பொழுது காங்கிரஸ் கட்சி, இந்து மஹா சபா, முஸ்லிம் லீக் ஆகியவை ஆதரித்தன. சிபிஐயும் பிரிவினையை ஆதரித்தது. இந்துக்களும் முஸ்லிம்களும் வெவ்வேறு தேசிய இனத்தவர் என்றது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (சிபிஐ) ஒரு தவறான முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்டது. மார்க்சிச–லெனினிச முறையை முற்றிலுமாக மீறியது. எனவே ஓர் உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியை அமைக்க வேண்டிய தேவை எழுந்தது.

மேற்கூறிய சம்பவங்கள் அனைத்தையும் ஒவ்வொன்றாக மார்க்சிய அணுகுமுறையை கையாண்டு தோழர் சிப்தாஸ் கோஷ் ஆய்வு செய்தார். ஏன் அவ்வாறு நடந்தன என பரிசீலித்தார். அதன் பிறகே அவர், சிபிஐ துவங்கிய போதே ஒரு தவறான வழியை பின்பற்றி இருந்தது என்ற முடிவுக்கு வந்தார். அது ஒரு கம்யூனிஸ்ட் கட்சியாக இல்லை. எனவே ஓர் உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியை துவக்கும் கடமையை அவரே மேற்கொண்டார். தோழர் சிப்தாஸ் கோஷ் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியை துவக்கி வளர்க்கும் பொழுது சிபிஐ ஒரு மாபெரும் வலிமையான கட்சியாக இருந்தது. சர்வதேச அளவில் மாபெரும் தலைவர்கள் தோழர் ஸ்டாலின், தோழர் மா சேதுங் ஆகியோரின் ஆதரவும் அவர்களுக்கு இருந்தது. தோழர் ஸ்டாலின், மா சேதுங் ஆகிய தலைவர்களை ஏற்றுக்கொண்ட தோழர் சிப்தாஸ் கோஷ் ஏன் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியை துவக்கினார்? சிபிஐ தலைவர்கள் நேர்மையானவர்களாகவும் உண்மையானவர்களாகவும் இருந்தனர். அவர்கள் மார்க்சிசத்தையும் படித்திருந்தனர். ஆனால் பண்டிதத்துவமும் அறிவும் ஒன்றல்ல. பண்டிதத்துவம் என்றால் வெறுமனே ஏராளமான புத்தகங்களை படித்தல் ஆகும். வெறும் புத்தக அறிவு ஆகும். ஆனால் மார்க்சிசத்தை வெறும் புத்தக அறிவால் கிரகிக்க முடியாது. மார்க்சிசத்தை வாழ்க்கையில் பிரயோகிக்க வேண்டும். மார்க்சிசம் என்பது வாழ்க்கை தத்துவம். உலகை மாற்ற விரும்பினால் முதலில் உங்களை மாற்றிக் கொள்ளுங்கள் என மார்க்சிசம் கூறுகிறது. முதலில் நீங்கள் உங்களை மாற்றிக் கொள்ளுங்கள். நம் அனைவரிடமும் பணம், புகழ், சொத்து, பதவி ஆகியவற்றிற்கான ஆசை இருக்கிறது. குடும்பத்துடன் வாழ வேண்டும் என்ற பலவீனம், சுயநலம் ஆகியவையும் இருக்கின்றன.

இவையாவும் மோசமான முதலாளித்துவ சமுதாயத்தில் இருந்து நமது மனங்களில் புகுந்துவிட்டவையாகும். மேலும், நிலப்பிரபுத்துவ சமுதாய சிந்தனைகளும் நம்மிடம் நிலவுகின்றன. எனவே இந்த குணாம்சங்களுடன் ஒருவர் மார்க்சிஸ்ட் ஆக முடியாது. இவ்வனைத்து குணாம்சங்களையும் சிந்தனைகளையும் முழுமையாக மனதில் இருந்து அகற்ற வேண்டும்.

### இந்திய மண்ணில் மார்க்சிசத்தை தோழர் சிப்தாஸ் கோஷ் பருண்மைப்படுத்தினார்

ஒரு கூட்டத்தில் தீர்மானத்தை நிறைவேற்றியோ, கட்டளையை பிறப்பித்தோ, ஒரு கம்யூனிஸ்ட் கட்சியை அமைக்க முடியாது என தோழர் லெனின் கூறினார். அதற்கு கருத்தொற்றுமை ஏற்படுவதற்கான சித்தாந்தப் போராட்டம் தேவையாகும். அதாவது மார்க்சிசம் என்ற ஆயுதம் கொண்டு போராட எண்ணுபவர்களிடையே சிந்தனையில் ஒற்றுமை தேவை. எல்லாப் பிரச்சினைகளிலும் எது சரியான புரட்சிகரமான தீர்வு என்பதை புரிந்துகொள்வதற்கு ஒரு போராட்டம் அவசியமாகின்றது. ஆனால் சிபிஐ அத்தகைய போராட்டத்தை நடத்தவில்லை. மும்பை, கொல்கத்தா, கான்பூர், டெல்லி ஆகிய நகரங்களில் கம்யூனிசத்தை பற்றி யோசித்துக் கொண்டிருந்த சில நபர்கள் குழுக்களை வைத்து ஒரு கம்யூனிஸ்ட் கட்சியை குழுக்களை வைத்து அமைத்து விடலாம் என திடீரென நினைத்தனர். சிபிஐ அவ்வாறுதான் தோன்றியது. லெனின் மேலும் கூறினார், மார்க்சிய தத்துவம் ஒரு பொது வழிகாட்டும் கோட்பாடாகும். அதனை குறிப்பிட்ட வகையில் பிரான்சிலிருந்து இங்கிலாந்தில் வேறாகவும் ஜெர்மனியில் இருந்து பிரான்சில் வேறாகவும் ரஷ்யாவில் வேறாகவும் பிரயோகிக்கப்பட வேண்டும்.

லெனின் இந்த வழிகாட்டுதலின்படி, மார்க்சிசத்தின் புரட்சியின் பொதுவான பாதையை இந்தியாவில் குறிப்பிட்ட பாதையாக பருண்மைப் படுத்தப்பட வேண்டும். இந்தியாவில் மார்க்சிசத்தின் பிரத்தியேகமான பழமையான வழி என்ன என்பதை தீர்மானிக்கும் போது, இந்தியாவின் பிரத்தியேகமான பொருளாதார அரசியலை, பிரத்தியேகமான கலாச்சாரத்தை, இந்நாட்டில் நிலவும் குறிப்பிட் முதலாளித்துவ சிந்தனையை, முதலாளித்துவ சித்தாந்தத்தை, இங்கு நிலவும் இந்து, இஸ்லாம், கிறிஸ்துவ மதங்களை, இந்நாட்டின் சமூக கண்ணோட்டத்தை, நடத்தையை, ரசனையை, பண்பாட்டை நன்கு அறிந்து அவற்றை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். இதைத்தான் நாம் குறிப்பிட்ட நாட்டில் குறிப்பிட்ட சூழ்நிலையில் மார்க்சிசத்தை பருண்மைபடுத்துதல் என கூறுகிறோம். இந்த அம்சங்களை சிபிஐ கட்சியினர் நினைத்துப் பார்க்கவில்லை. லெனினின் இந்தப் படிப்பினைக்கு அவர்கள் முக்கியத்துவம் தரவில்லை. ரஷ்யாவில் லெனின் இதைச் செய்தார், சீனாவில் மாசேதுங் இதைச் செய்தார். தோழர் சிப்தாஸ் கோஷ் இதனை உணர்ந்திருந்தார். எனவேதான் செயல்முறைக்கு அவர் மிகுந்த முக்கியத்துவம் அளித்தார். ஆகவே சூழலுக்கு ஏற்ப, இந்நாட்டிற்கு ஏற்ற வகையில் மார்க்சிசத்தைப் பருண்மைப்படுத்தினார். இதன் போக்கில் அவர் மார்க்சிசத்தை வளர்த்து செழுமைப் படுத்தி, தத்துவம், அரசியல், பொருளாதாரம்,

தொடர்ச்சி 4ம் பக்கம்

## தோழர் பிரவாஸ் கோஷ் உரை . . .

# தேவை வாக்கு அரசியல் அல்ல, வெகுஜன மற்றும் வர்க்கப் போராட்டங்களே

3ம் பக்கத் தொடர்ச்சி

கலாச்சாரம், கலை, இலக்கியம் என அறிவியல் மற்றும் அறிவாதாரவியலின் அனைத்துகளிலும் தனது பங்கை வழங்கினார்.

### ஓர் முன்னணி மார்க்சிய சிந்தனையாளராக சிப்தாஸ் கோஷ் உருவானார்

இரண்டாவதாக, கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்குபவர்களிடம் மார்க்சிய அணுகுமுறையை பின்பற்றி தீவிர சித்தாந்தப் போராட்டம் நடைபெற்று, அனைத்து கேள்விகளிலும் பொதுவான கருத்தை மார்க்சிச லெனினிசத் தத்துவத்திற்கு உகந்தார் போல் உருவாக்க வேண்டும் என அவர் கூறினார். இந்த கூட்டு அறிவு, யார் அதனை சிறப்பாக உயரிய வடிவத்தில் வெளிப்படுத்துகிறாரோ அவர் தலைவராக உருவாக வேண்டும் என்றார். அந்த தலைவர் சிந்தனையாளராக இருப்பார். அப்படித்தான் லெனின் ஸ்டாலின் மாசேதுங் ஆகியோர் உருவாயினர். சிபிஐ கட்சி நமது நாட்டில் அத்தகைய போராட்டத்தை நடத்தாததால் அதுபோன்ற ஒரு தலைவரை உருவாக்கவில்லை. இதுபோன்ற போராட்டத்தை நடத்தித்தான் நமது கட்சியில் தோழர் சிப்தாஸ் கோஷ் மார்க்சிய சிந்தனையாளராக உருவானார். தீர்மானம் ஏதும் நிறைவேற்றுவதன் வாயிலாக இது அடையப்படவில்லை. சிந்தனை முரண்பாடுகள் மூலமும் இயக்கயியல் ஊடாட்டங்கள் மூலமும் போராட்டத்தின் மூலமும் அவர் உருவானார். இந்த முறையை பின்பற்றித்தான் நமது கட்சியில் சித்தாந்த மத்தியத்துவம் உருவானது.

மூன்றவதாக, தனிச் சொத்து மட்டுமின்றி, சிந்தனையில் தனிச் சொத்து மனப்பான்மை யிலிருந்தும் விடுபட்ட உயர்தர கம்யூனிஸ்ட்டுளைக் கொண்டு ஒரு புரட்சியாளர் குழு உருவாகப்பட வேண்டும். தனிச் சொத்து மனப்பான்மை, சிந்தனை என்பது எனது வீடு, எனது நலன், எனது உணர்வு, எனது விருப்பங்கள், நான் யோசிப்பதே சரி, எனது பெயர், எனது பெருமை, எனது பதவி, எனது கோபம், எனது காதல், எனது நேசம் போன்றவற்றை குறிக்கின்றது. ஒருவரிடம் தனிச்சொத்து இல்லாமல் இருக்கலாம் ஆயினும் சொத்தின் அடிப்படையிலான மனநிலையை அவர் வளர்த்துக் கொண்டிருக்கலாம். இவற்றில் இருந்து விடுபட்ட, அதாவது தனது சொந்த நலனை உழைக்கும் வர்க்க நலனுடன் புரட்சியின் நலனுடன் கட்சியின் நலனுடன் இணைத்துக் கொண்டிருப்பவரே, அத்தகைய தரம் கொண்டவரே கட்சியின் தலைவர்களாக இருக்க வேண்டும். இந்தத் தரம் எட்டப்படாத வரை, சுய போராட்டத்தின் மூலம் அத்தகைய தலைவர்கள் உருவாகாத வரை கட்சியை தோற்றுவிக்க முடியாது. இந்த மூன்று செயல் முறைகளை கடைப்பிடித்துத்தான் தோழர் சிப்தாஸ் கோஷ் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியை உருவாக்கினார். மாறாக சிபிஐ கட்சியில் தலைவர்களின் அரசியல் வாழ்க்கையும் குடும்ப வாழ்க்கையும் முற்றிலும் வெவ்வேறானவை ஆகும். கம்யூனிஸ்ட் கலாச்சாரம் என்றால் என்ன, மார்க்சிசத்தை வாழ்க்கையில் பிரயோகிப்பது எப்படி போன்ற கேள்விகளைப் பற்றியெல்லாம் கவலைப்பட வில்லை. பின்னால் சிபிஐயிலிருந்து பிளவுபட்டு தோன்றிய சிபிஐ (எம்) கட்சிக்கும் இது பொருந்தும். இதன் விளைவாக, இக்கட்சிகளின் தொண்டர்கள் கம்யூனிசத்தின் மீதும் இடதுசாரி மீதும் ஈர்ப்பு கொண்டிருந்த போதும், கடுமையான உழைப்பு, அர்ப்பணிப்பு செய்த போதும், மக்கள் போராட்டங்களின் போதும், அடக்குமுறை துன்பங்களை எதிர்கொண்ட போதும் இக்கட்சிகள் கம்யூனிஸ்ட் கட்சிகளாக உருவாக இயலவில்லை.



பொதுக்கூட்டத்தில் பங்களாதேஷ் பிரதிநிதி எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) பொதுச்செயலாளருக்கு நினைவுப் பரிசாக செங்கொடியை வழங்குகிறார்

முதலாளித்துவத்தின் இன்றைய அழுகிய காலகட்டத்தில், தனிநபர்வாதம் மோசமான சுயநல, தன்மைய சிந்தனையாக சீரழிந்தவிட்ட இக்கால கட்டத்தில், லெனின் வகுத்த, கட்சியை உருவாக்கும் முறையை தோழர் சிப்தாஸ் கோஷ் மேலும் வளர்த்து முன்னேற்றி நமது கட்சியை தோற்றுவித்தார். இக்கடமையை சிபிஐ செய்யவில்லை. எனவே அதுவும் அதிலிருந்து பிளவுபட்ட கட்சிகளும் உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியாக தோன்ற வில்லை. மாறாக அவை சமூக ஜனநாயக சமரசவாத (சோசியல் டெமாக்ரசி) கட்சிகளாக உருவாகின.

### இந்தியாவில் சரியான புரட்சித் திட்டத்தை தோழர் சிப்தாஸ் கோஷ்தான் வகுத்தெடுத்தார்

சுதந்திரத்தின் மூலம் 1947ஆம் ஆண்டு இந்திய தேசிய முதலாளிகள் அரசைக் கைப்பற்றி அதிகாரத்திற்கு வந்தவுடன் அரசியல் சுதந்திரம் இந்தியாவிற்கு கிடைத்து விட்டது. இந்த விஷயத்திலும் சிபிஐ கட்சியுடன் தோழர் சிப்தாஸ் கோஷ் வேறுபட்டார். 1947இல் இந்தியா அரசியல் விடுதலையை பெற்றுவிட்டதாக சிபிஐ உணர வில்லை. அதனை ஒரு படி முன்னேற்றம், அதாவது ஒரு படி முன்சென்றிருப்பதாக அவர்கள் கூறினார். மேலும் நேருவை முற்போக்காளர் என்றும் பட்டேலை பிற்போக்காளர் என்றும் அவர்கள் கருதினர். எனவே நேருவை ஆதரிக்க வேண்டும் என்றனர். முதலாளித்துவ அர்த்தத்தில், இந்தியா அரசியல் விடுதலையை பெறவில்லை

தொடர்ச்சி 5ம் பக்கம்

# பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் தோழர் சிப்தாஸ் கோஷ் பிறந்த நூற்றாண்டு – வெளிநாட்டு கம்யூனிஸ்ட் கட்சிகள் வாழ்த்து

### கம்யூனிஸ்ட் பார்ட்டி ஆஃப் பாகிஸ்தான் கட்சியிலிருந்து வாழ்த்து செய்தி:

ஆகஸ்ட் 5, 2023 அன்று நடைபெறவுள்ள தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களது பிறந்த நூற்றாண்டு நிகழ்ச்சி வெற்றிபெற கம்யூனிஸ்ட் பார்ட்டி ஆஃப் பாகிஸ்தான் அக்கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் மற்றுமுள்ள தலைவர்கள், தொண்டர்களுக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஸ்தாபகரும் இத்துணைக் கண்டத்தின் மற்றும் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் மாபெரும் சித்தாந்த வாதியுமான தோழர் சிப்தாஸ் கோஷின் பிறந்த நூற்றாண்டு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதென்பதை நாங்கள் மிகவும் கௌரவமாக கருதுகிறோம்.

ஒருமித்து குரலெப்பும் இயக்கத்தை வலுப் படுத்தும் நோக்கத்துடன் உலக கம்யூனிஸ்டுகள் மற்றும் தொழிலாளர் கட்சிகளிடையேயான சர்வதேச ஒற்றுமை, ஒத்துழைப்புக்கான தேவை உள்ளது என்பதை நாங்கள் நம்புகிறோம்.

அதிகரிக்கும் உலக சமமின்மையின் விளைவாக சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் புதுப்பித்தலின் வாய்ப்பை தவிர்க்க முடியாததாக்குகிறது. அது மாற்று சோசலிச சமூக–பொருளாதாரத்தின் மீதான விருப்பத்தை அதிகரிக்கச் செய்கிறது. மார்க்சிசம்–லெனினிசம் எனும் உன்னத கோட்பாடுகளின் கீழ் அனைத்துவிதமான சமூக ஜனநாயகம், திருத்தல்வாதத்தை புறந்தள்ளி சோசலிச எதிர்காலத்தை கண்முன் நிறுத்த நாம் ஒன்றுசேர்ந்து பணியாற்றுவோம். உலக பொதுமக்களின், உழைக்கும் வர்க்கங்களுக்கான சமத்துவம், நீதி, பாதுகாப்பிற்காக சோசலிச அமைப்பை கொண்டுவர நாம் போராட வேண்டும்.

சோசலிசப் புரட்சி நீடூழி வாழ்க!

முதலாளித்துவம்–ஏகாதிபத்தியம் ஒழிக!

எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) உடனான தோழமை நீடூழி வாழ்க!

### ஓர்க்கர்ஸ் வோர்ல்ட் பார்ட்டியின் வாழ்த்து செய்தி:

உங்கள் கட்சியின் ஸ்தாபகரும் உலகம் தழுவிய அளவில் மார்க்சிசம்–லெனினிசத்தின் வளர்ச்சிக்கு பங்களித்தவருமான தோழர் சிப்தாஸ் கோஷின் பிறந்த நூற்றாண்டை அனுசரிப்பதற்கு புரட்சிகர வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் பெருமை கொள்கிறோம். அவருடைய பங்களிப்புக்கள் யுஎஸ்ஸிலுள்ள கம்யூனிஸ்டுகளும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றாகும்.

பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை உயர்த்திப்பிடித்து, யு எஸ் ஏகாதிபத்திற்கெதிராக அனைத்து சக்திகளுடனும் இணைவதைப்போல் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) வுடனும் ஒத்துழைப்பை வெளிப்படுத்துகிறோம்.

### பார்ட்டி ஆஃப் கம்யூனிஸ்ட், யுஎஸ்ஏ

தோழர் சிப்தாஸ் கோஷின் பிறந்த நூற்றாண்டை அனுஷ்டிக்கும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சிக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

குருச்சேவின் திருத்தல்வாதத்தை எதிர்ப்பதிலும் மாவோ அவர்களை மிதமிஞ்சிய வகையில் உயர்த்திப்பிடிப்பதையும் வலது திருத்தல்வாதம், இடது அதிதீவிரவாதத்தை மறுதலிப்பதிலும் இந்தியாவின் பிற கம்யூனிஸ்ட் கட்சிகளிடமிருந்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) வேறுபட்டிருக்கிறது.

### சோசலிஸ்ட் பார்ட்டி ஆஃப் பங்களாதேஷ் (மார்க்சிஸ்ட்):

தோழர் சிப்தாஸ் கோஷின் பிறந்த நூற்றாண்டை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ள எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சிக்கு வாழ்த்துக்கள். தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களை மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், மா சேதுங் வரிசையில் வைத்து மார்க்சிசத்தின் ஓர் அத்தாரிடியாகக் கருதுகிறோம்.

தற்போது நாங்கள் எங்கள் நாட்டில் ஒரு உண்மையான புரட்சிகரக் கட்சியை வளர்த் தெடுக்கும் தீவிரப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறோம்.

### சிலோன் கம்யூனிஸ்ட் யூனிடி சென்டர்:

தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் சிந்தனைக்கு நாங்கள் செவ்வணக்கம் செலுத்துகிறோம்.

கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களின் கட்டுப்பாடு, நடத்தை, ஒரு புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சிக்கும் கட்சி உறுப்பினர்களின் புரட்சிகர உத்வேகம் குறித்த அவரது விளக்கம், முற்போக்கான தேசியவாதம், சர்வதேசியம் மற்றும் ஏகாதிபத்தியத்தின் புதிய வகை ஆகியன குறித்து குறிப்பிடத்தக்க சூழ்நிலையில் அவரது விளக்கம் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும் ■

## தோழர் பிரவாஸ் கோஷ் உரை . . .


# மார்க்சிசம்–லெனினிசத்தை தோழர் சிப்தாஸ் கோஷ் விரிவாக்கி வளர்த்தெடுத்து செழுமைப்படுத்தினார்

*4ம் பக்கத் தொடர்ச்சி*

என்ற சிபிஐ கட்சியின் புரிதலை 1964 வரையிலான அக்கட்சியின் ஆவணங்களை புரட்டிப் பார்த்தால் சிபிஐ, சிபிஐ(எம்) தொண்டர்கள் அறிய முடியும். ஆனால், 1947 முதல் முதலாளிகள் இந்தியாவில் ஆட்சி அதிகாரத்திற்கு வந்து விட்டார்கள், அவர்கள் முதலாளிகள் அல்ல, ஏகபோக முதலாளிகள் என்று தோழர் சிப்தாஸ் கோஷ் கூறினார். லெனின் கூறியபடி இது முதலாளித்துவத்தின் உச்சக்கட்டமாகும். இந்திய முதலாளித்துவம் அந்தக் கட்டத்தை அப்பொழுதே எட்டி விட்டது. தற்போது முதலாளித்துவம் பன்னாட்டு முதலாளித்துவமாக, ஏகாதிபத்திய தன்மை கொண்டதாக வளர்ந்து விட்டது. இந்திய ஏகபோக முதலாளிகள் 16,50,350 கோடியை வெளிநாடுகளில் ஆலைகளிலும் சுரங்கங்களிலும் முதலீடு செய்திருக்கின்றன. 1947இல் இந்திய முதலாளித்துவ வர்க்கம் அதிகாரத்தை கைப்பற்றிய பிறகு, இந்தியாவில் புரட்சியின் கட்டம் முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிச புரட்சி என தோழர் சிப்தாஸ் கோஷ் வரையறுத்தார். இவ்வாறாக இந்திய முதலாளித்துவம் உச்சக்கட்டத்தை அடைந்துவிட்ட பிறகும், இந்திய தேசிய பூர்ஷ்வாக்கள் முற்போக்கானவர்கள் என சிபிஐ(எம்) கருதுகிறது. இந்தியாவில் புரட்சியின் கட்டத்தை மக்கள் ஜனநாயக புரட்சி எனவும், அதன்படி இந்திய முதலாளிகள் புரட்சியின் கூட்டாளிகள் எனவும் இக்கட்சி கருதுகின்றது. இன்றும் இந்த கட்சி மக்கள் ஜனநாயக புரட்சி என்ற திட்டத்தைத்தான் சொல்லிக் கொண்டு இருக்கிறது. இதன் விளைவாகத்தான் பாஜகவின் மதவாதத்தை எதிர்க்கிறோம் என்று காங்கிரசுடனும் காங்கிரசின் எதேச்சாதிகாரத்தை எதிர்க்கிறோம் என்று சில சமயம் பாஜக உடனும் கூட்டு சேர்கின்றது. இவற்றை நான் இங்கு பேசுவதற்கு காரணம், யதார்த்த உண்மைகளை சுட்டிக் காட்டுவதற்கே ஒழிய சிபிஐயையும் அதிலிருந்து பிரிந்து வந்த சிபிஐ(எம்) கட்சியையும் தவறாக பேசும் கெட்ட எண்ணத்தில் அல்ல. எனது விவாதத்தின் நோக்கம், ஏன் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) என்ற புதிய ஒரு உண்மையான மார்க்சிஸ்ட் கட்சியை தோழர் சிப்தாஸ் கோஷ் உருவாக்க அவசியமானது, ஏனெனில் சிபிஐ கட்சியின் தன்மையும் செயல்பாடும் மார்க்சிசத்திற்கு புறம்பானதாக இருந்தது என விளக்குவதற்கே ஆகும்.

தோழர் சிப்தாஸ் கோஷ் மற்றுமொரு முக்கிய அம்சத்தையும் வலியுறுத்தினார். "எந்த ஒரு சித்தாந்தத்தின் தத்துவத்தின் எந்த ஒரு கருத்தியலின் சாராம்சம் அதன் தார்மீக கலாச்சார அம்சத்தில் பொதிந்திருக்கின்றது". ஒரு அரசியல் தத்துவம், தார்மீக வலிமையையும் கலாச்சாரத் தரத்தையும் உயர்த்தாவிட்டால், அந்த அரசியல் தீங்கு பயப்பதும் பயனற்றதும் ஆகும் என்பதை நினைவில் கொள்வீர் என்றார் அவர். பாசம் இருப்பதால் இறந்த உடலை எடுத்தெறியாமல் தொடர்ந்து அழுக வைத்திருந்தால் எப்படி நாற்றமெடுக்குமோ அதைப்போலவே, தார்மீக கலாச்சார மதிப்பற்ற தத்துவத்தை வைத்திருப்பதும் தீமை பயக்கும். அதனை ஒரேயடியாக கைவிட வேண்டும். இதுவும் தோழர் சிப்தாஸ் கோஷின் மிக முக்கிய பாடமாகும்.

இந்தக் கூட்டத்தில் நமது கட்சியில் இல்லாத சாதாரண பொதுமக்களும் இருக்கின்றீர்கள். எங்கள் கட்சித் தோழர்களை நீங்கள் பாராட்டுகின்றீர்கள். எங்கள் கட்சி முற்றிலும் வேறுபட்டது என்கிறீர்கள். இந்த வேறுபாடு எதில் இருக்கின்றது?




**கொல்கத்தாவிலுள்ள பிரிகேட் பேரேட் மைதானத்தை நோக்கி பேரணியாக செல்லும் புதுச்சேரி பிரதிநிதிகள்**

ஒன்று, நாங்கள் தேர்தலுக்காக இருக்கும் கட்சி அல்ல. நாங்கள் ஒரு புரட்சிகரக் கட்சி, ஓட்டுக்களை வாங்குவதற்காக நெறியற்ற சந்தர்ப்பவாத பாதையில் நாங்கள் இறங்குவதில்லை. எந்த ஒரு பெரிய கட்சியையும் நாங்கள் முகஸ்துதி செய்வதில்லை. புரட்சிகர அரசியலையும் புரட்சிகரச் சித்தாந்தத்தையும் எங்கள் கட்சி மேல்மட்டம் முதல் கீழ் வரை உயிரோட்டத்துடன் நடைமுறையில் கடைபிடிக்கின்றது. மற்றுமொரு அம்சம், தோழர் சிப்தாஸ் கோஷ் கற்றுக் கொடுத்தபடி, நாங்கள் மேலும் சிறந்த குணத்தையும் உயர்ந்த கலாச்சாரத்தையும் பெற விரும்புகிறோம். இதே சமுதாயத்தின் குழந்தைகள்தான் எங்கள் கட்சியின் தொண்டர்கள் ஆவர். ஆனால் இச்சமுதாயத்தின் பிற குழந்தைகளிடம் இருந்து அவர்கள் ஏன் வேறுபட்டுள்ளார்கள்? ஏனெனில், அவர்கள் தார்மீக மதிப்புகளை தோழர் சிப்தாஸ் கோஷ் பாடங்களில் இருந்து கற்றுக்கொண்டுள்ளார்கள். ஒருமுறை அவர் வருத்தத்துடன் கூறினார்: "நாம் இன்று வேரற்றவர்கள் ஆகிவிட்டோம். சுதந்திரப் போராட்ட காலத்தில் எட்டிய உயர்ந்த கலாச்சார தரத்தின் தொடர்ச்சியை பேண நாம் தவறிவிட்டோம். வெளி உலகிலிருந்து உயரிய வார்த்தைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றோம் என்பதில் ஐயமில்லை. ஆனால் நமது சொந்த பூமியில் ஒரு காலத்தில் வளர்ந்த உயர்ந்த கலாச்சார சுருதியின் தொடர்பை நாம் இழந்து விட்டோம். நமது நாட்டில் அரசியல் மற்றும் கலாச்சார இயக்கத்தில் முன்பு எட்டப்பட்ட உயர்ந்த தார்மீக அறநெறி கலாச்சார மற்றும் கலாரசனை ஆகியவற்றின் உயர்ந்த தரம் இன்று விழுந்துவிட்டது. இதன் விளைவாக நாம் வேரற்றவர்களாகிவிட்டோம். நாம் பெரிய விஷயங்களை பேசுகிறோம். ஆனால் உன்னதமான உணர்வுகளையும் மெல்லிய உணர்ச்சிகளையும் வளர்த்தெடுக்கத் தவறிவிட்டோம்."

உயர்ந்தக் குணத்தை அடைவதற்கான உயிரோட்டம் உள்ள போராட்டம் நமது கட்சியில் இருக்கின்றது. எனவே கட்சியும் தொண்டர்களும் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டது என உங்களிடம் கருத்து ஏற்பட்டால், அதற்கு இதுதான் காரணங்களாகும். தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் பாடங்களை நாங்கள் கற்றுக் கொள்கிறோம் அதன் அடிப்படையில் புரட்சிகர அரசியலை நாங்கள் நடைமுறைப்படுத்துகிறோம். அதன் மூலம் அறிவைப் பெற முயற்சிக்கின்றோம். எங்கள் கட்சி தொண்டர்கள் உயர்ந்த அறிவைப் பெற வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். ஒருபுறம் அவர்கள் தோழர் சிப்தாஸ் கோஷின் பாடங்களைக் கற்று உயர்ந்தக் குணத்தை அடைய போராடுகிறார்கள், மக்கள் மனங்களை பலத்தால் அல்ல, வம்பு இழுப்பதன் மூலம் அல்ல, பிறரை இழிவுபடுத்துவதன் மூலம் அல்ல, பொய் சொல்லுவதன் மூலம் அல்ல, மாறாக பொறுமையான, கண்ணியமான நடத்தையின் மூலமும் தர்க்கத்தின் மூலமும் மக்களை வெல்ல வேண்டும் என்று தோழர் சிப்தாஸ் கோஷ் கூறுகிறார். இந்த முன் மாதிரியை தான் இன்றும் நாங்கள் கடைபிடிக்கிறோம். மறுமலர்ச்சி காலத்தின் சுதந்திரப் போராட்ட காலத்தின் மாபெரும் மனிதர்களின் வாழ்க்கை மற்றும் போராட்டங்களில் இருந்து, அந்த புரட்சியாளர்களின் உயர்ந்தக் குணங்களிலிருந்து கற்றுக்கொண்டு அதேசமயம் இன்று சூழ்நிலை மாறிவிட்டதால் அவர்களிடமிருந்து ஓர் முறிவையும் ஏற்படுத்தி இன்றைய சூழ்நிலைக்கு ஏற்ப உயர்ந்த கம்யூனிச குணத்தை அடைய நாங்கள் முயற்சிக்கின்றோம். இதனால்தான் நாங்கள் மற்ற கட்சிகளிடமிருந்து தனித்தன்மையுடன் வேறுபடுகிறோம்.

### தேவை வாக்கு அரசியல் அல்ல, வெகுஜன மற்றும் வர்க்கப் போராட்டங்களே

நாங்கள் தேர்தலில் பங்கு பெறுகிறோம். தேர்தல்கள் இருக்கும் வரை மக்கள் அதில் ஈடுபட்டிருக்கும் வரை அரசியல் கருத்தை மக்களுக்கு எடுத்துச் செல்ல நாங்களும் தேர்தலில் பங்கேற்றாக வேண்டும். ஆனால் குறுக்கு வழியிலோ எதையும் செய்தோ தேர்தலில் வெற்றி பெற நாங்கள் முயற்சிப்பது இல்லை. இந்துக்களின் வாக்குகளை, முஸ்லிம்களின் வாக்குகளை, கிறிஸ்துவர்களின் வாக்குகளை பெற முயற்சிப்பது எங்கள் அரசியல் அல்ல எங்களைப் பொறுத்தவரை இந்து, முஸ்லிம், மேல் ஜாதியினர், கீழ் ஜாதியினர், வங்காளி, பீஹாரி, மராத்தி என்ற அடையாளத்துடன் நோக்குவதில்லை. எங்களை பொறுத்தவரை சுரண்டப்படும் மக்கள் ஒருபுறமும் சுரண்டும் மக்கள் எதிர்ப்புறமும் நிற்கின்றனர். ஒன்றுக்கு ஒன்று எதிரெதிரான வர்க்கங்களாகும் சுரண்டப்படும் வர்க்கத்தின் கண்ணோட்டத்தில் இருந்து நாங்கள் தேர்தலில் போராடுகிறோம். எனவே கட்சி முற்றிலும் வேறான படையில் தேர்தலில் நிற்கின்றது. அடிப்படையில் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி ஒற்றுமைப்படுத்தி நாங்கள் வெற்றிபெற முடிந்தால் நன்று. முடியாமல் போனாலும் எங்கள் கொள்கையை நாங்கள் விட்டுவிட மாட்டோம். வெகுஜனப் போராட்டங்களை உயர்ந்தக் கலாச்சாரத்தின் அடிப்படையில் தீவிர படுத்துவதன் மூலம் அரசியல் அதிகாரத்தை உருவாக்கி புரட்சிக்கான பலத்தை நாங்கள் தொடர்ந்து உருவாக்கிக் கொண்டிருப்போம்.




**கொல்கத்தாவிலுள்ள பிரிகேட் பேரேட் மைதானத்தை நோக்கி பேரணியாக செல்லும் தமிழ்நாடு பிரதிநிதிகள்**

### பாசிச அபாயம் குறித்து 1949லேயே தோழர் சிப்தாஸ் கோஷ் எச்சரித்தார்

பாசிசத்தைப் பற்றி இன்று பேசுகின்றனர். ஆனால் 1949இல் தோழர் சிப்தாஸ் கோஷ் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரகடனம் செய்தார். அவர் கூறினார்: ஜெர்மனியும் இத்தாலியும் போரில் தோற்றுவிட்டன. ஆனால் பாசிசம் முறியடிக்கப்படவில்லை. அனைத்து வளர்ந்த மற்றும் வளர்ச்சி குன்றிய முதலாளித்துவ நாடுகளில் பல்வேறு வடிவங்களில் இன்றும் இருக்கின்றது என்று கூறிய முதல் மனிதர் அவரே ஆகும். பாசிசத்திற்கு மூன்று குணாம்சங்கள் இருக்கின்றன என்றார் அவர். ஒன்று மூலதன குவியல், ஏக போக மூலதனமே மூலதனம் மையப்படுத்தப் பட்டுள்ளதற்கு எடுத்துக்காட்டாகும். இரண்டு, நிர்வாகத்திடம் அனைத்து அதிகாரங்களும் குவிந்திருத்தல். மக்களவை, நிர்வாகம், நீதித்துறை என அமைப்புகளுக்கிடையே ஒப்பீட்டளவில் நிலவிய சுதந்திரம் நிர்வாகத்திடமே அதிக அதிகாரம் குவிந்திருத்தல். அவர் கூறிய மற்றுமொரு முக்கிய விஷயம், கருத்துத் துறையில் ஆன்மீக மற்றும் மதவாத சிந்தனைகளை பரப்புதல். அதில் தர்க்கமோ, காரண காரியத்திற்கான தொடர்போ, அறிவியல் அணுகுமுறையோ இருக்காது. அறிவியல் என்ற பெயரில் வெறும் இயந்திரங்களையும் அறிவியலின் நுட்ப அம்சங்களையும் முதலாளித்துவ ஏகாதிபத்திய வாதிகள் ஆட்சியாளர்கள் முன்னிறுத்தி, அறிவியலின் தொழில்நுட்ப அம்சங்களை ஆன்மீகவாதத்துடன் ஓர் கலவையை கொண்டுவர முயற்சிக்கின்றனர். அவர்கள் மனித சிந்தனையையும் காரணத்தை அறியும் தன்மையையும் விமரிசனபூர்வமாக சிந்திக்கும் முறையையும் அழிக்க நினைக்கின்றனர். இதை செய்து விட்டால் பூர்ஷ்வா தலைவர்களின் பின்னால் கண்ணை மூடிக்கொண்டு அணிதிரள்வார்கள். பூர்ஷ்வா அரசாங்கத்தின் அரசின் திட்டங்களுக்கு கண்மூடித்தனமாக அடிபணிவார்கள். இராணுவ சிப்பாய்கள் போன்று இயந்திரங்களைப் போல் பின் செல்லும் தன்மை கொண்ட, மக்களை படைமுறைப்படுத்துவது அவர்களின் நோக்கம் ஆகும். ஆக பாசிசம் மனிதனை மனிதனாக்கும்

தொடர்ச்சி 6ம் பக்கம்

# பாஜக கூறும் வளர்ச்சி அம்பானி அதானியின் வளர்ச்சியே, மக்களின் வளர்ச்சியல்ல – தோழர் சத்யவான்

இன்று ஆகஸ்ட் 5, இது இந்தியாவில் மட்டு மல்லாது உலகம் முழுவதும் உள்ள தொழிலாளர் வர்க்கம், பாடுபடும் மக்களுக்கு மிகவும் முக்கியத் துவம் வாய்ந்த நாளாகும். இதே நாளில்தான் 100 ஆண்டுகளுக்கு முன்பு பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் தோழர் சிப்தாஸ் கோஷ் பிறந்தார். தற்போது அதன் நிறைவு நிகழ்ச்சி பிரம்மாண்ட பொதுக்கூட்டமாக நடைபெறுகிறது.

தோழர் சிப்தாஸ் கோஷ் இளம் வயதிலேயே இந்திய விடுதலைப் போராட்டத்தில் குதித்தார். அனைத்து அநீதிகளிலும் விடுபட்ட சுதந்திரம் வேண்டுமென்று அவர் கனவு கண்டார். ஆனால் இந்திய தேசிய முதலாளிகள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிவிட்டதால் மக்கள் விரும்பிய விடுதலையை அடைய முடியவில்லை. எனவே சுரண்டல், அநீதிகளின் பிடியிலிருந்து நாட்டை விடுவிப்பதற்காக சரியான புரட்சிகரக் கட்சியை அவர் கட்டியெழுப்பினார்.

1976ல் அவர் இறந்த பிறகு மாபெரும் இலக்கிய வாதி சரத்சந்திரரின் பிறந்த நூற்றாண்டு நிகழ்ச்சி ரேடியோவில் ஒலிபரப்பானது. அதில் இந்திய இலக்கியவாதி விஷ்ணு பிரபாகர் பேசுகையில் தோழர் கோஷ் மேற்கோள்களை சுட்டிக்காட்டி ஒரு மார்க்சிய சிந்தனையாளராக இருந்தபோதிலும் எப்படி இலக்கியத்தை இவ்வளவு எளிமையாகவும் ஆழமாகவும் புரிந்துகொண்டார் என்று வியந்தார். சுதந்திரத்திற்குப் பிறகு மிகவும் முன்னணி மூன்று மனிதர்களை குறிப்பிடுங்கள் என்று இந்தி எழுத்தாளர் நிர்மல் குமார் வர்மாவிடம் கேட்டபோது அதில் தோழர் சிப்தாஸ் கோஷின் பெயரும் இடம் பெறும் என்று பதிலளித்தார். ஆனால் நாட்டின் முதலாளித்துவ ஆட்சியாளர்கள் தோழர் சிப்தாஸ் கோஷின் பெயர் மக்களுக்குத் தெரிந்துவிடக்கூடாது என்று திட்டமிட்டு செயல்படுகின்றனர். இன்றைய வரலாற்றுச் சிறப்புமிக்க பேரணி அவர்களது நயவஞ்சக சதியை நிச்சயம் முறியடிக்கும்.

இந்தியாவைச் சுரண்டவேண்டும் என்று பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் காவல்துறை, இராணுவம், கொடுமையான சட்டங்கள், நீதித்துறை போன்ற வலுவான அரசு எந்திரத்தை உருவாக்கினர். அந்த அரசு எந்திரத்தைத்தான் சுதந்திரம் என்ற பெயரில் இந்திய முதலாளிகள் கைப்பற்றினர்.



எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொலிட் பீரோ உறுப்பினர் தோழர் சத்யவான் உரை

மக்களை ஈவிரக்கமின்றிச் சுரண்டி இன்று உலக பணக்காரர்கள் வரிசையில் முதல் 10 இடங் களுக்குள் வந்துவிட்டனர். இத்துணைக்கண்டத்தில் இந்திய முதலாளித்துவம் ஒரு வல்லரசாகிவிட்டது.

பாஜக அரசாங்கம் அறிவியல், வரலாறு போன்றவற்றை திரித்து வருகிறது. நாடு முழுவதும் மதவெறி, சாதிய, வகுப்புவாத, இனவெறி எனும் விஷத்தை பரப்பி வருகிறது. மணிப்பூர் பற்றி எரிகிறது. ஹரியாணாவின் நுஹ் மாவட்டத்தில் மதவெறி தூண்டப்பட்டது. முந்தைய காங்கிரஸ் ஆட்சியில் அநீதி தொடர்ந்து அதிகரித்தது, தற்போது பாஜக ஆட்சியிலும் அது பன்மடங்கு அதிகரிக்கிறது. மதவெறிபிடித்த பிற்போக்குவாத பாஜக அரசாங்கம் தூக்கியெறியப்படவேண்டும்.

ஆயிரம் தேர்தல்கள் நடந்தபின்னரும் மக்கள் பிரச்சினைகளுக்கு முடிவே இல்லை மாறாக பிரச்சினைகள் மேலும் அதிகரிக்கின்றன என்று தோழர் சிப்தாஸ் கோஷ் கூறினார். சக்திவாய்ந்த வெகுஜன இயக்கங்களை வளர்த்தெடுப்பதே மக்கள் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கான ஒரே தீர்வு. ஆனால் அந்த இயக்கம் சரியான திசைவழியில் செல்ல வேண்டுமானால் அதற்குச் சரியான தலைமை வேண்டும். அதற்காகத்தான் அவர் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியை உருவாக்கினார். வரலாற்று சிறப்புமிக்க சிங்கூர், நந்திகிராம் வெற்றிபெற்றதற்கு நமது கட்சி காட்டிய சரியான போராட்டப் பாதையே காரணமாகும். ஹரியாணாவிலும் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைப்பதற்காக அம்பானியிடம் கொடுக்க 25000 ஏக்கர் நிலங்களை அபகரிக்க முயன்றதை தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனையின் அடிப்படையில் போராட்ட கமிட்டிகள் ஏற்படுத்தி வலுவான இயக்கத்தின் மூலம் முறியடித்தோம்.

ஒரு விஷயத்தை கூறி எனது உரையை நிறைவு செய்கிறேன். 1942ல் நடைபெற்ற வெள்ளையனே வெளியேறு இயக்கம் நாட்டைவிட்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வெளியேற வைத்தது. 1947ல் அரசியல் விடுதலை கிடைத்துவிட்டது, ஆனால் சுரண்டலிலிருந்து விடுதலை கிடைக்கவில்லை. ஏனென்றால், அந்த இயக்கத்தில் சரியான புரட்சிகரத் தலைமை ஏற்படவில்லை. காங்கிரசின் சமரசவாதத் தலைமை பகத்சிங்கை சிறுமைப் படுத்தியது, தலைமைப்பதவியிலிருந்து நேதாஜியை வெளியேற்றியது. அதேபோல் 1974ல் குஜராத் முதல் பீஹார் வரை பரவிய மாணவர்கள் இளைஞர்கள் போராட்டம் புரட்சிகர இயக்கமாக மாறுவதற்கு உகந்த நிலை இருந்தது. ஆனால் மார்க்சிஸ்டுகள் என்று அழைக்கப்படும் சிபிஐ, சிபிஐ(எம்) கட்சிகள் அதில் வலதுசாரிகள் இருக்கிறார்கள் என்று கூறி ஒதுங்கி இருந்தனர். இதனால் இயக்கத்திற்கு இடதுசாரி தலைமை யேற்கும் வாய்ப்பு தவறவிடப்பட்டது, போராட்டமும் நீர்த்துப்போய்விட்டது. எனவேதான் மக்கள் இயக்கங்களுக்கு சரியான புரட்சிகரத் தலைமையை உருவாக்கவேண்டியது முக்கியமானதாகும். இதற்கு எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியை அமைப்புரீதியாக, அரசியல்ரீதியாக, கலாச்சார ரீதியாக வலுப்படுத்த வேண்டும்.

இந்திய விடுதலைப்போராட்டத்தின் சமரசமற்ற போக்கின் நீட்சியாகவும் மறுமலர்ச்சி காலகட்டத்தின் நிறைவேறாத பணிகளை நிறைவேற்றும் விதமாகவும் பாட்டாளிவர்க்க கலாச்சார இயக்கத்தை பரப்பும் கடமையை தோழர் சிப்தாஸ் கோஷ் ஏற்றுக்கொண்டார். எதிர்காலம் மக்கள் கையில் என்று அவர் முழங்கினார். அவரது சிந்தனையை ஆழமாகக் கிரகித்து, அந்த பணியை நிறைவேற்றுவோம் என்று இந்த நூற்றாண்டு விழாவில் சபதமேற்போம் ■

# தோழர் பிரவாஸ் கோஷ் உரை . . .

5ம் பக்கத் தொடர்ச்சி

போக்கையே அழிக்கின்றது. அன்று சிபிஐ உட்பட பலரும் தோழர் கோஷின் கூற்றை நம்பவில்லை. இங்கு மேலும் ஒரு விஷயத்தை நான் கூற வேண்டும். பாசிசத்தை எந்த ஒரு கட்சியும் கொண்டு வரவில்லை. பாசிசம் என்பது முதலாளித்துவத்தின் ஒரு குறிப்பிட்ட கட்டமாகும். முதலாளித்துவத்தின் ஆரம்பக் கட்டத்தில் மன்னர் ஆட்சியை அதிகாரத்திலிருந்து தூக்கியெறிந்து பாராளுமன்ற ஜனநாயகம், ஜனநாயக குடியரசை நிலைநாட்டியது. அன்று முதலாளித்துவம் சமூக முன்னேற்றத்திற்கான கோஷங்களை எழுப்பிக் கொண்டிருந்தது. எப்பொழுது முதலாளித்துவம் ஏகபோக மூலதனக் கட்டத்தை அடைந்து விட்டதோ, அதாவது பிற்போக்கான மரணத் தருவாயை அடைந்து விட்டதோ, சீரழிந்து மடியும் இந்தத் தருணத்தில் முதலாளித்துவம் பாசிசத்தை தோற்றுவித்தது, எந்த ஒரு கட்சியும் அல்ல.

### அனைத்துப் பிரச்சினைகளையும் வர்க்க கண்ணோட்டத்துடன் சீர் தூக்கிப் பார்க்க வேண்டும்

இந்தியாவில் முதலாளித்துவம் ஒரு குறிப்பிட்ட புதிய கட்டத்தை எட்டி உள்ளது. இனி தேசிய நலன் என்று பொதுவாக எதுவும் இல்லை என தோழர் சிப்தாஸ் கோஷ் கூறினார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஆட்சி செய்த பொழுது முன்பு ஏழைகளும் பணக்காரர்களும் ஒன்றிணைந்து அதற்கு எதிராக போராடினர். சுதந்திரத்திற்குப் பிறகு பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இல்லை. தற்போது இந்திய தேசிய முதலாளிகள் ஆட்சி புரிகின்றனர். லாப நோக்கத்துடன் முதலாளித் துவம் செயல்படுகின்றது. முதலாளிகளின் நலனும் சுரண்டப்படும் மக்களின் நலனும் எதிர் எதிராக முரண்பட்டு நிற்கின்றன. எனவே ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் இடையே ஒற்றுமை என்ற கேள்விக்கு இனி இடமில்லை. ஒருபுறம் முதலாளித்துவத்தால் சுரண்டலும் கொள்ளையடித்தலும் நடக்கின்றது. மறுபுறம் சுரண்டலுக்கு எதிராக சுரண்டப்படும் மக்களின் வெகுஜன வர்க்க போராட்டங்கள் நடைபெறு கின்றன. சுரண்டப்படும் மக்கள் இந்த வர்க்க கண்ணோட்டத்துடன் தான் அனைத்தையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு தனிநபரும் எந்த ஒரு விஷயத்தையும் பார்க்கும் பொழுது தெரிந்தோ தெரியாமலோ முதலாளித்துவ கருத்து கண்ணோட்டத்தில் பார்க்கிறார், அல்லது சுரண்டப்படும் வர்க்கத்தின் கண்ணோட்டத்தில் விழிப்புணர்வுடன் பார்க்கின்றார்.

அரசியலும் இருவகையானவையே, ஒரு அரசியல் முதலாளித்துவ சுரண்டலை பாதுகாக் கின்றது, மற்றொரு அரசியல் முதலாளித்துவ சுரண்டலை ஒழிக்க பார்க்கிறது. முதலாளித்துவம் இருக்கும் வரை மக்கள் தொடர்ந்து கொடூரமாக நசுக்கப்படுவார்கள், ஒடுக்கப்படுவார்கள். முதலாளித்துவ சுரண்டல் ஆட்சியில் அனைத்து மக்களுக்குமான நலன் என்பது வேடதாரித் தனமாகும். நாடு இன்று கையளவு சுரண்டல் காரர்கள், மிகப்பெரிய சுரண்டப்படுபவர்கள் என பிளவுபட்டுள்ளது எனவே எல்லாவற்றையும் வர்க்க கண்ணோட்டத்துடன் தான் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் ■

*(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில் வெளிவரும்)*




மத்திய தொழிற்சங்கங்களின் 14 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னையில் பெருந்திரள் அமர்வு கூட்டத்தில் ஏஐயுடியுசி மாநிலத் தலைவர் தோழர் அனவரதன் உரை

# ஐக்கிய விவசாயிகள் முன்னணியின் (சம்யுக்த கிசான் மோர்ச்சா) போராட்டங்களும் ஏஐகேகேஎம்எஸ்இன் புரட்சிகரப் பங்களிப்பும்

முன்னதாக அகில இந்திய அளவில் 2017 ஜூலை மாதத்தில் கிட்டத்தட்ட 250 விவசாய சங்கங்களை உள்ளடக்கிய ஏஐகேஎஸ்சிசி (AIKSCC) அகில இந்திய விவசாயிகள் போராட்ட ஒருங்கிணைப்பு கமிட்டி எனும் அமைப்பு உருவாக்கப்பட்டிருந்தது. இக் கமிட்டியானது மத்திய பிரதேச மாநிலம் மான்ஸார் என்ற இடத்தில் 2017 ஜூன் மாதத்தில் காவல்துறை துப்பாக்கி சூட்டில் இறந்த 6 விவசாயிகளுக்கு நியாயம் கேட்கும் நோக்கத்தில் உருவாக்கப்பட்டது. இதன் அங்கமாக இருந்த 250 விவசாய சங்கங்களில் அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் ஏஐகேகேஎம்எஸ் (AIKKMS) அமைப்பும் ஒன்று. அதே ஆண்டில் 'சுயஆட்சி இயக்கத்தின் தோழர் கே பாலகிருஷ்ணன் அவர்களை ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு தமிழ்நாட்டில் ஏஐகேஎஸ்சிசி அமைப்பைத் துவங்க சென்னையில் நடைபெற்ற ஓர் கூட்டத்தில் ஏஐகேகேஎம்எஸ் அமைப்பு அதில் கலந்துகொண்டு அதற்கு முழு ஆதரவை தந்தது.

அகில இந்திய அளவில் டில்லியில் துவங்கப்பட்ட சம்யுக்த கிசான் மோர்ச்சா (எஸ்கேஎம்–SKM) அமைப்பின் கோரிக்கைகளான 1. மூன்று வேளாண் அவசர சட்டங்களைக் கைவிடக் கோருவது 2. அனைத்துப் பயிர்களுக்கும் குறைந்தபட்ச ஆதார விலையை நிர்ணயிக்க சட்ட அங்கீகாரம் கோருவது 3. மின்சார சட்ட திருத்த மசோதாவைக் கைவிடக் கோருவது ஆகியன ஏஐகேஎஸ்சிசி கோரிக்கைகளாக ஏற்றுக்கொள்ளப் பட்டு அனைத்துப் போராட்டங்களிலும் ஏஐகேகேஎம்எஸ் பங்கெடுத்தது. பின்பு ஏஐகேஎஸ்சிசி அமைப்பு எஸ்கேஎம் அமைப்பாக செயல்பட துவக்கியது.

2020 நவம்பர் மாதத்தில் எஸ்கேஎம் அமைப்பானது டில்லியில் ஓர் மாபெரும் போராட்டத்தைத் துவக்கியது. விவசாயிகளின் உறுதிமிக்க போராட்டத்தைக் கண்டு அஞ்சிய மோடி அரசாங்கம் தனது தந்திர உபாயத்தின் ஒரு பகுதியாக விவசாயிகள் பிரதிநிதிகள் உச்சநீதிமன்ற பிரதிநிதிகள், அரசாங்கத்தின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு கமிட்டி அமைக்கப் போவதாகவும் மூன்று வேளாண் சட்டங்களையும் ஒன்றரை ஆண்டு காலத்துக்குத் தள்ளிவைப்பது என்றும் ஒரு முன்மொழிவை வைத்தது. எஸ்கேஎம் அமைப்பின் அங்கமாக உள்ள சில அமைப்புகள் அதற்கு இணங்கிப் போகலாம் எனும் ஆலோசனையை முன்வைத்தபோது ஏஐகேகேஎம்எஸ் அரசாங்கத்தின் நயவஞ்சகத் திட்டத்திற்கு ஆளாகாமல் விவசாயிகள் போராட்டத்தை தொடர வேண்டும் என்றது. இக் கருத்து எஸ்கேஎம் அமைப்பின் தலைவர்களால் அங்கீகரிக்கப்பட்டது. இறுதியாக போராட்டமும் வெற்றியடைந்தது.

தமிழ்நாடு எஸ்கேஎம் செயற்குழுவில் ஏஐகேகேஎம்எஸ் ஓர் அங்கமாக இருப்பதுடன் சென்னை, தஞ்சை, திருவாரூரில் நடைபெற்ற மாபெரும் மாநாடு, சென்னை முதல் வேதாரண்யம் வரை நடைபெற்ற டில்லியில் உயிர்நீத்த விவசாயிகள் அஸ்தி கரைப்பு யாத்திரை என எஸ்கேஎம் முன்னெடுத்த அனைத்துப் போராட்டங் களிலும் பங்கெடுத்தது. இதுபோக சென்னை பெருநகர், சேலம், விழுப்புரம், தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை மாவட்டங்களில் அமைக்கப்பட்ட எஸ்கேஎம் மாவட்ட ஒருங்கிணைப்புக் கமிட்டிகளிலும் ஏஐகேகேஎம்எஸ் அங்கமாக இருக்கின்றது.

இந்திய விவசாயிகளின் தீரமிக்க போராட்டத்தின் காரணமாக அடிபணிந்த பாஜக அரசாங்கம், 3 வேளாண் சட்டங்களையும் ரத்து செய்கிறோம், குறைந்தபட்ச ஆதார விலையை நிர்ணயம் செய்ய கமிட்டி அமைக்கப்படும், மின்சார சட்டத்திருத்த மசோதாவைக் கைவிடுகிறோம், விவசாயிகள் மீது போடப்பட்ட வழக்குகளை திரும்பப் பெறுகிறோம், உள்துறை இணை அமைச்சர் மகன் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கிறோம் என எழுத்துப்பூர்வ உத்தரவாதம் அளித்த பின்னரும் அவற்றை செயல்படுத்த நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை. விவசாயிகளுக்கு வாக்குறுதி அளித்து அவற்றை இன்றுவரை நிறைவேற்றாமல் வஞ்சித்துவிட்டது.




**ஏஐகேகேஎம்எஸ்இன் அகில இந்தியச் செயற்குழு உறுப்பினர் தோழர் நாகம்மாள் திருச்சியில் நடைபெற்ற மாநாட்டில் உரை**

இந்த நிலையில், தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் இணைந்து நடத்திய 29.08.2023 அகில இந்திய மாநாட்டில் எஸ்கேஎம் அறைகூவலுக்கு இணங்க தமிழ்நாடு எஸ்கேஎம் மாநில அளவிலான கோரிக்கை விளக்க மாநாட்டை தமிழ்நாட்டில் திருச்சி நகரில் வெற்றிகரமாக நடத்தியது. அம்மாநாட்டில் ஏஐகேகேஎம்எஸ் அமைப்பின் அகில இந்தியத் தலைவர்களில் ஒருவரான தோழர் நாகம்மாள் அவர்களும் உரையாற்றினார்கள்.

**அகில இந்திய அளவிலான போராட்டத்தின் ஓர் அங்கமாக வரும் நவம்பர் 26,27,28 தேதிகளில் சென்னை ஆளுநர் மாளிகையை முற்றுகையிடும் போராட்டத்தை நடத்த தமிழ்நாடு எஸ்கேஎம் திட்டமிட்டிருக்கிறது.** இதில் ஏஐகேகேஎம்எஸ் நிச்சயமாக உரிய பங்காற்றும் ■

# மக்கள் நலனில் சிறிதும் அக்கறையற்ற இந்திய இரயில்வே துறை

மாபெரும் தலைவர் தோழர் சிப்தாஸ் கோஷின் பிறந்த நூற்றாண்டு நிறைவு நிகழ்ச்சிக்கு தமிழ்நாட்டுத் தோழர்கள் கல்கத்தாவிற்கு சென்று விட்டு ஆகஸ்ட் 6ஆம் தேதி ஹௌரா சென்னை எக்ஸ்பிரஸில் முன்பதிவு செய்யப்பட்ட பெட்டிகளில் ஏற முயன்றனர். ஆனால் முன்பதிவு செய்யப்படாத பெட்டியில் (Unreserved) ஏறுவது போல் அவற்றில் மக்கள் கூட்டம் வழிந்து நின்றது. காரணம், முன்பதிவு செய்யாத பயணிகள் எண்ணிக்கை அதிகமாகவும், இரயிவே டிக்கெட் பரிசோதகர், நடைமேடையில் அமர்ந்துகொண்டு, முன்பதிவுப் பெட்டிகளில் பதிவு செய்யாதவர்கள் ஏற, அபராதம் வாங்கிக் கொண்டு சட்ட விரோதமாக அனுமதித்ததுமாகும். அவ்வளவு கூட்ட நெரிசலில் முதியவர்களோடும், பெண்கள் குழந்தைகளோடும் ஒருவழியாக முண்டியடித்துக் கொண்டு தோழர்கள் பெட்டியில் ஏறினர்.

டிக்கெட் பரிசோதகர் ஒருவர் வழியில் உட்கார்ந்து மற்றும் நின்று கொண்டிருந்த முன்பதிவு செய்யாதவர்களிடம் அபராதப் பணம் வசூலித்து, இறக்கிவிடாமல் அவர்கள் அதில் பயணம் செய்ய அனுமதித்துக் கொண்டிருந்தார். பயணிகளில் சிலர் அவரிடம் இது எப்படி சரி என்று கேள்வி எழுப்பினர். அதற்கு அவர் ஏதோ ஹிந்தியில் பதில் கூறிக்கொண்டே அவர்களிடம் கட்டணம் வசூலிப்பதிலேயே கவனம் செலுத்தினார்.

கரக்பூர் இரயில் நிலையத்தை வண்டி அடைந்தவுடன், முன்பதிவு செய்யப்பட்ட அனைத்து பெட்டிகளிலிருந்தும் மக்கள் கீழே இறங்கினர். முன்பதிவு செய்யப்படாதோருக்கு மாற்று ஏற்பாடு செய்ய வலியுறுத்தியும் தங்களுக்குரிய படுக்கைகளை உத்திரவாதப்படுத்தக் கோரியும் குரல் எழுப்பினர். இரயில்வே போலீஸ் பயணிகள் கோரிக்கையை ஏற்கவில்லை. பயணிகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்த பொழுதே இரயில் புறப்பட்டது. இதனால் கோபமடைந்த பயணிகள் இரயில் என்ஜின் முன்பாக அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர். பயணிகள் இப் பிரச்சினையை வலியுறுத்தி அதற்குத் தீர்வாக, முன்பதிவு செய்யாத பயணிகளுக்கு கூடுதல் பெட்டிகளை இணைக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். இறுதியாக கூடுதல் பெட்டிகள் இணைக்கப்பட்டு கரக்பூர் இரயில் நிலையத்தில் இருந்து நான்கு மணி நேரத்துக்கு பின்பாக இரயில் புறப்பட்டது.

### இரயில்வே துறையின் மிக மோசமான நடவடிக்கை

இச்சம்பவம் பல கேள்விகளை எழுப்பியது. முதலில் இரயில்வே துறை தூங்கும் வசதி (Sleeper Class) பெட்டிகளை 12 லிருந்து 5 தாக குறைத்து விட்டு ஏசி (AC) வசதி கொண்ட மூன்றடுக்கு பெட்டிகளை அதிகப்படுத்தியுள்ளது. இது, அதிக எண்ணிக்கையில் உள்ள இரண்டாம் வகுப்பு பயணிகளுக்கு இடம் மறுப்பதாகும். அதே சமயத்தில் போதிய முன்பதிவு செய்யப்படாத பெட்டிகள் இல்லாத சூழலில் சாதாரண ஏழை, எளிய மற்றும் புலம்பெயர் கூலித் தொழிலாளர்கள் வேறு வழியின்றி முன்பதிவு செய்யப்பட்ட பெட்டிகளில் பயணிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். அப்படி பயணிக்கும் இம்மக்களிடம் அபராத கட்டணமாக கூடுதலாக ரூ500 முதல் ரூ1100 வரை வசூலிக்கின்றனர். அதன் பிறகு முன்பதிவு செய்யப்பட்ட பெட்டிகளில் நெருக்கடித்துக் கொண்டு பயணிக்க வைக்கின்றனர். முன்பதிவு செய்தோருக்கும் நெருக்கடி கொடுக்கின்றனர். சமீபத்தில் பல ஆண்டுகளாக, புலம்பெயர் தொழிலாளர்கள் எண்ணிக்கை அதிகமாகிவிட்ட நிலையில் இது தொடர்ந்து நடக்கின்றது. இரண்டாம் வகுப்பில் முன்பதிவு செய்தோர் தொடர்ந்து புகார் கொடுப்பதால், அப்பெட்டிகளை முதல் வகுப்பு (AC III tier) பெட்டிகளாக மாற்றி அதிக கட்டணம் வசூலிக்கிறது இரயில்வே துறை! அதேபோல இரண்டாம் வகுப்பு முன்பதிவு பெட்டிகளில் பதிவு செய்யாதோர் ஏறுவதைத் தடுப்பதற்கு மாறாக அபராதம் விதித்து பயணிக்க அனுமதிக்கிறது. இரட்டை வருமானம்! இது இரயில்வே துறை மக்கள் மீது அக்கறை கொள்ளவில்லை என்பதைவிட மேலாக, அவர்களது நெருக்கடியை காசாக்கும் வஞ்சக சிந்தனையைக் காட்டுகிறது.

### இரயில்வே துறைக்கு சில கேள்விகள்

சமீப காலத்தில் இரயில்வே பட்ஜெட்டில் சில திட்டங்கள் மற்றும் வழித்தடங்களை பற்றி அறிவிப்பதோடு நிறுத்தப்பட்டுவிடுவது ஏன்? பட்ஜெட்டில் சொல்லாமல் அதன் அமுலாக்கத் திற்குப் பின் கட்டணத்தை உயர்த்துவது ஏன்? முன் பயண சீட்டை ரத்து செய்தால் பிடித்தம் செய்யப்படும் கட்டணத்தோடு ஜிஎஸ்டி வரியையும் சேர்த்து பிடித்தம் செய்வது ஏன்? சார்ட் தயாரிக்கப்பட்டு விட்டால் அதன்பின்பு பயணத்தை ரத்து செய்தால் முன்பு நடைமுறையில் இருந்த கட்டணமும் திருப்பித் தர இயலாது என்று முடிவு செய்தது ஏன்? மூத்த குடிமக்களுக்கு இருந்த, ஆண்களுக்கு 40%, பெண்களுக்கு 50% கட்டணக் குறைவு நீக்கப்பட்டது ஏன்? இரண்டாம் வகுப்பு பெட்டிகளைக் குறைத்து தூங்கும் வசதி கொண்டகுளிர்சாதன பெட்டிகளாக மாற்றி கிட்டத்தட்ட ஒன்றரை மடங்கு கட்டணத்தை அதிகப்படுத்தியது ஏன்? முன்பதிவு செய்யப்படாத பயணிகளிடம் முன் பதிவு செய்யப்பட்டதற்கான கட்டணத்தைவிட அதிகமாக வசூலித்துக் கொண்டு முன் பதிவு பெட்டிகளில் ஏற்றுவது ஏன்?

இரயிலில் பயணம் செய்வதன் தேவையே பிரதானமாக இரவு நேரத்தில் சிறிது ஓய்வு எடுத்துக் கொண்டு அடுத்த நாள் பணிக்குச் செல்வதாகும். ஆனால் அதிக பணிகள் இருக்கும் காரணத்தினால் கழிப்பறைகள் எண்ணிக்கை, தண்ணீர் வசதி, இதனால் சுகாதாரமற்ற சூழல் எல்லாம் ஏற்படுகிறது. விபத்து நடக்க கூடாது என்று விரும்பினாலும் விபத்துகள் நடக்கின்றன. ரயில்வேதுறையின் தனியார்மயம், இலாப நோக்கம், தகுதி குறைந்த ஊழியர்களை ஒப்பந்தப் பணியாளர்களாக அமர்த்துதல் என தவறான

தொடர்ச்சி 8ம் பக்கம்

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : First week of Every Month

பாட்டாளி சிந்தனை

Registered with the Registrar of Newspapers for India No : 62018/1988

# தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனை உலக கம்யூனிஸ்டுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது – தோழர் ராதாகிருஷ்ணா

*(கொல்கத்தாவில் நடைபெற்ற தோழர் சிப்தாஸ் கோஷ் பிறந்த நூற்றாண்டு நிறைவு விழாவில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொலிட் பீரோ உறுப்பினர் தோழர் ராதாகிருஷ்ணா ஆற்றிய தலைமை உரை)*

நமது அன்பிற்குரிய தலைவர், ஆசான், வழிகாட்டி, இக்காலகட்டத்தின் மாபெரும் மார்க்சிய சிந்தனை யாளார் தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களது நினைவாக இங்கே மனிதகுலம் அலைகடலெனத் திரண்டுள்ளது.


தனது ஆழமான புரிதல் மூலம், இயக்கயியல் பொருள்முதல்வாதத் தத்துவத்தை அவர் கிரகித்து, இன்று நாம் பார்க்கக்கூடிய பல நிகழ்வுகளை அவர் முன்கூட்டியே கணித்த சில விஷயங்களை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தோழர் சிப்தாஸ் கோஷ் எழுதிய 'ஸ்டாலினுக்கு எதிராக சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி எடுத்த நடவடிக்கைகள்' என்ற புத்தகத்தை போல்ஷ்விக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் நினா ஆன்ட்ரீவா படித்துவிட்டு, ரஷ்யாவில் இருக்கும் எங்களால் புரிந்துகொள்ள முடியாததை 3000 கிலோமீட்டருக்கு அப்பால் இருந்து கொண்டு இவர் கச்சிதமாக புரிந்துள்ளாரே என்று வியந்தார். 1962ல் கியூபா நெருக்கடி குறித்த பல்வேறு அம்சங்களை தோழர் சிப்தாஸ் கோஷ் விவரித்தது குறித்து அமெரிக்காவின் ஓர்க்கர்ஸ் வோர்ல்டு கட்சியின் தலைவர் தோழர் சாரா ஃப்ளௌன்டர்ஸ் புகழ்ந்துள்ளார்.

அதேபோன்று, சுதந்திர இந்தியா ஒரு முதலாளித்துவ இந்தியாவாக இருக்கும், பிரிட்டிஷ் சுரண்டலாளர்கள் இருந்த இடத்தில் இந்திய முதலாளித்துவ வர்க்கம் வந்து அமரும் என்று தோழர் கோஷ் கூறினார். அது 100% உண்மையானது. சுதந்திரப் போராட்ட காலத்தில் காந்திஜியின் மனத்தில் பாட்டாளி வர்க்க புரட்சியை குறித்த மரண பயம் இருந்தது என்று அவர் கூறினார். எனவேதான் காந்திஜி அகிம்சை என்று முழங்கினார். நிலப்பிரபுத்துவ கலாச்சாரம், மதம், சாதி என எல்லாவற்றுடனும் சமரசம் செய்யும் வழியை காந்திஜி பின்பற்றினார் என்று தோழர் சிப்தாஸ் கோஷ் சுட்டிக்காட்டினார். எனவேதான் அரசியல் ரீதியாக இந்தியா விடுதலை அடைந்தாலும் கலாச்சாரரீதியாக, சமூகரீதியாக சாதிகளாக, சமூகங்களாக, பழங்குடிகளாக, பல உள்ஜாதி களாக இன்னும் பல விஷயங்களாகப் பிரிந்து கிடக்கிறது என்று தோழர் கோஷ் சுட்டிக்காட்டினார். அதோடு நமது நாடு பல மதங்களை, பல மொழிகளை உடைய நாடு. கலாச்சாரரீதியாகவும் சமூக ரீதியாகவும் நாடு ஒன்றுபடவில்லை. ஏனென்றால் கலாச்சாரப் புரட்சி நடைபெறவே இல்லை. இதனால் நமது நாட்டில் இன்று வகுப்புவாத வன்முறைகள் ஏராளம் நடைபெறுகின்றன,

மதத்தோடு அரசியல் சமரசம் செய்து கொண்டதால் நமது நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் மூன்று முக்கிய சக்திகள் திரளாகக் கலந்துகொள்ளவில்லை என்று மிகவும் வேதனையுடன் தோழர் கோஷ் தெரிவித்துள்ளார். ஒன்று, முஸ்லீம் சமுதாயம், அடுத்து தலித்துகள், அடுத்தது பெண்கள். இவர்கள் எல்லாருமே சமுதாயத்தில் மிகவும் மோசமாக ஒடுக்கப்படும் பிரிவினராவர். சுதந்திரப் போராட்டத்தில் அவர்கள் திரளாகக் கலந்துகொள்ளவில்லை, ஏனென்றால் காந்தியின் தலைமையில் அது மதச்சார்பு தேசிய வாதமாக, குறிப்பாக இந்துமத சார்பு தேசிய வாதமாக, அதிலும் உயர் ஜாதி சார்பு தேசியவாதமாக இருந்தது. எனவேதான் இன்றும் இந்த மூன்று பிரிவினரும் தொடர்ந்து ஒடுக்கப்பட்டு வருகின்றனர்.

சுதந்திரப் போராட்டத்தின் அதே பாரம்பரியத்தை ஆளும் முதலாளித்துவ வர்க்கம் இன்றும் தொடர்வதை நாம் பார்த்து வருகிறோம். இந்திய மக்களை பிரிட்டிஷார் பிரித்தாண்டதைவிட இன்று ஆளும் முதலாளித்துவ வர்க்கம் அதிகமாக பிரித்தாள்கிறது. தோழர் சிப்தாஸ் கோஷின் சீடர்களான நாம்தான் மணிப்பூர் மட்டுமல்ல, பிளவுபடுத்தப்பட்டுள்ள ஒட்டுமொத்த நாட்டையும் ஒன்றுபடுத்தும் பொறுப்பையும் சுமக்கவேண்டும். முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசப் புரட்சியின் மூலம் பூர்ஷ்வாக்களை ஆட்சி அதிகாரத்திலிருந்து தூக்கியெறிந்துவிட்டு அனைத்து சுரண்டல் களிலிருந்து விடுபட்ட தொழிலாளர் வர்க்க அரசை உருவாக்க வேண்டும் என்பது தோழர் சிப்தாஸ் கோஷின் கூறினார். அவரது கூறியதை நிறைவேற்றுவோம் என்றும் அவரது சிந்தனையை உலகமெங்கும் பரப்புவோம் என்றும் மீண்டும் உறுதியேற்போம் ■



**எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொலிட் பீரோ உறுப்பினர் தோழர் ராதாகிருஷ்ணா உரை**

# மக்கள் நலனில் சிறிதும் அக்கறையற்ற இந்திய ரயில்வே . . .

7ம் பக்கத் தொடர்ச்சி

நடவடிக்கைகளால் விபத்துக்கள் அதிகரிக்கின்றன. சமீபத்தில் ஒரிசா மாநிலத்தின் பாலாசோறில் நடந்த கோர விபத்து இந்திய மக்களை ஆழ்ந்த துக்கத்தில் ஆழ்த்திவிட்டது. அத்துடன் மத்திய அரசாங்கத்தின் மக்கள் மீதான அக்கறையின் மீதும் ரயில்வே துறையின் திறமையின் மீதும் கடும் விமரிசனங்கள் எழுந்தன.

### கரக்பூரில் போராடியவர்கள் முன்வைக்கும் சில உடனடிக் கோரிக்கைகள்

சமீப வருடங்களாக முன்பதிவு செய்த பயணிகளுக்கும் பதிவு செய்யாத புலம்பெயர் தொழிலாளர்களுக்கும் இடையே, முன்பதிவுப் பெட்டிகளில் அடிக்கடி பிரச்சினைகள் எழுவது இரயில்வே துறைக்குத் தெரியும். ஆயினும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இம்முறை எமது தோழர்கள் துணிந்து கரக்பூரில் இரயில் மறியல் போராட்டத்தில் குதித்ததுடன், உபரி பெட்டிகளை இணைக்கவைக்கும் கோரிக்கையிலும் வெற்றி பெற்றனர். இப்போராட்டத்தில் புலம்பெயர் தொழிலாளர்களும் இறங்கினர். பல்வேறு தமிழக ஊடகங்கள் அக்கணமே செய்தியை சற்றுமுன் வந்த செய்தி எனக் காட்டி ஆளுவோருக்கு நெருக்கடி கொடுத்தன. இது போராட்டத்திற்கு கிடைத்த தற்காலிக வெற்றியாகும். புலம்பெயர் தொழிலாளர்களும் பொதுமக்களும் இணைந்து போராட்டக் களத்தில் இறங்கினால் கீழ்க்கண்ட கோரிக்கைகளுக்கு நிரந்தரத் தீர்வு கிட்டும்.



**கரக்பூர் இரயில் நிலையத்தில் முன்பதிவு செய்யப்படாத கூடுதல் பெட்டிகள் இணைக்க கோரி இரயில் மறியல்**

- இலட்சக்கணக்கில் பயணிக்கும் புலம்பெயர் தொழிலாளர்களின் பயணத்தேவையை முறையாகக் கணக்கிட்டு இரயில்கள் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.
- முன்பதிவு செய்யப்படும் பெட்டிகளின் எண்ணிக்கையை குறைத்து ஏசி பெட்டிகளாக மாற்றி அதிக கட்டணம் வசூலிக்கும் வஞ்சக நடவடிக்கையை கைவிட வேண்டும்.
- இரண்டாம் வகுப்பு முன்பதிவு செய்த மற்றும் முன்பதிவற்ற பெட்டிகளை அதிகபடுத்த வேண்டும் ■

**இந்திய விஞ்ஞானிகளுக்குப் பாராட்டு**

சந்திரயான் திட்டத்தை வெற்றிகரமாக்கியதற்கு எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் ஆகஸ்ட் 24 அன்று விஞ்ஞானிகளை வாழ்த்தி அறிக்கை வெளியிட்டார்.

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: ஆ ரெங்கசாமி அலுவலகம்: பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 007 அச்சகம்: ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094, **ஆசிரியர்: ஆ ரெங்கசாமி**

Published by: A Rengasamy on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 007 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. **Editor: A Rengasamy**
Tel : 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**